# மன்னிப்பு

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு

# *மன்னிப்பு*

<u>பொருளடக்கம்</u>


| | | |
|---|---|---|
| | | <u>பக்கம்</u> |
| 1. | பகைமையின் விளைவு | 5 |
| 2. | i) என்னை மன்னித்துவிடு | 16 |
| | ii) காற்றில் இறகுகள் | 22 |
| 3. | மாயத்துண்டு | 30 |
| 4. | பகைமை பகைமையால் தணிவதில்லை | 38 |
| 5. | புனிதர் பிரான்சிஸ் | 57 |
| 6. | தியான குரு ஹக்குயின் | 64 |
| 7. | கல்லால் அடிக்கப்பட்ட பெண் | 72 |
| 8. | ஒரு பண்டிதரின் கதை | 81 |

*****மன்னிப்பு****

## 1. *பகைமையின் விளைவு.*

*முன்னொரு காலத்தில் ஒரு குடும்பத்தில் தாய், தந்தை, மகன் என மூவர் வாழ்ந்து வந்தனர். மகன் வளர்ந்து வாலிபப் பருவத்தை அடையும் தருவாயில் தந்தை இறந்துவிட்டார். தாய்க்கும் வயதாகிவிட்டது. கடந்த காலத்தில் தன் தாயார் எவ்வாறு தன்னை அன்போடு பேணிக் காத்து வந்தாளோ, அதுபோல் இப்போது அந்த இளைஞன், தன் வயதான தாயிடம் அன்பு செலுத்தி, அவளைப் பேணிக் காத்து வந்தான்.*

*"நமக்கோ வயதாகிவிட்டது. எந்நேரத்திலும் நமக்கு மரணம் வரலாம். மகனுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டோமென்றால், நம் மகனின் சுகதுக்கங்களில் மனைவி பங்கு கொண்டு அவனுக்குத் துணை நிற்பாள்," என எண்ணிய தாயார் அவனுக்குத் திருமணம் செய்து வைத்தாள்.*

*ஆனால், திருமணம் செய்த அந்தப் பெண்ணிற்குக் குழந்தை பாக்கியம் இல்லை. மலடியான தன்னைக்*

****மன்னிப்பு***

கணவனும் மாமியும் தவறாக நடத்துவார்களே என அஞ்சிய அவள், தானே ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து, அவளைத் தன் கணவனுக்கு இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து வைத்தாள்.

சில மாதங்களில் இரண்டாம் மனைவி கருவுற்றாள். அவள் முதல் மனைவியிடம் அதைத் தெரிவித்தாள். அதைக் கேட்டுப் பொறாமை கொண்ட முதல் மனைவி, "இவள் ஒரு மகனையோ, மகளையோ பிரசவித்தாள் என்றால், இந்தக் குடும்பத்திற்கு இவள் எஜமானியாகிவிடுவாள். அப்போது இந்தக் குடும்பத்தில் எனக்குச் செல்வாக்கு இருக்காது. இவள் குழந்தையைப் பிரசவிக்காமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்," என உறுதி எடுத்துக் கொண்டாள்.

கருவுற்றிருந்தவளுக்குச் சுவையான உணவு சமைத்துக் கொடுப்பதுபோல் பாவனை செய்து, உணவில் மருந்து கலந்து கொடுத்துக் கருச்சிதைவு செய்தாள் முதல் மனைவி.

இரண்டாம் தடவை கருவுற்றதும் அதை மூத்தவளிடம் கூறினாள் இளையவள். முன்பு போலவே உணவில் மருந்து கலந்து கொடுத்து இதையும் கருச்சிதைவு செய்துவிட்டாள் மூத்தவள்.

மூன்றாம் தடவை கருவுற்றபோது, அதை மூத்தவளிடம் கூறவில்லை இளையவள். ஆனாலும், சில மாதங்கள்

****மன்னிப்பு***

சென்றபின், இவளுடைய வயிறு பெருத்திருப்பதைப் பார்த்த முதல் மனைவி, இவள் கருவுற்றிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டாள்.

முன்பு போலவே கருச்சிதைவு செய்வதற்காக இளையவளின் உணவில் மருந்து கலந்து கொடுத்தாள் மூத்தவள். ஆனால் கரு வளர்ந்து விட்டதால், குறைப் பிரசவம் ஏற்பட்டு அதில் தாயும் குழந்தையும் இறந்துவிட்டனர்.

இறப்பதற்குமுன் "என் மூன்று குழந்தைகளையும் இவள் கொன்றுவிட்டாள். இப்போது என்னையும் கொன்றுவிட்டாள். என் குழந்தைகளை இவள் கொன்றதுபோல், இவள் குழந்தைகளை நான் கொல்ல வேண்டும்," என மூத்தவளைப் பழிவாங்கச் சபதம் செய்து கொண்டு, உள்ளத்தில் பகையுடன் உயிர் துறந்தாள் இளையவள். இவ்வாறாக இவர்களிடையே பகை ஆரம்பித்தது.

பழிவாங்க வேண்டுமென உள்ளத்தில் பகையுடன் இறந்த இளையவள், மறுபிறப்பில் ஒரு பெண் சிறுத்தையாகப் பிறந்தாள். மூத்தவள் இறந்தபின், மறுபிறப்பில் ஒரு பெண் மானாகப் பிறந்தாள்.

அந்தப் பெண்மான் குட்டிகளை ஈன்றபோது, அந்தப் பெண் சிறுத்தை அந்தக் குட்டிகளைக் கொன்று தின்றது. தன் குட்டிகளைக் கொன்று தின்ற சிறுத்தையைத் தனக்குத்

****மன்னிப்பு***

*தீங்கிழைத்த விரோதி என உள்ளத்தில் பகை கொண்டது அந்தப் பெண்மான்.*

*அந்தப் பிறப்பு முடிவுற்றதும் மறுபிறப்பில் அந்தப் பெண்மான் ஒரு பூனையாகப் பிறந்தது. அந்தப் பெண் சிறுத்தை ஒரு பெட்டைக் கோழியாகப் பிறந்தது. பெட்டைக்கோழி முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பொரித்தபோது, பூனை அந்தக் குஞ்சுகளைக் கொன்று தின்றது.*

*இவ்வாறாக மூத்தவளும் இளையவளும் பல பிறப்புகளில் ஒருவருக்கொருவர் தீங்கிழைத்து இருவருமே துன்பப் பட்டார்கள். இறுதியாக மூத்தவள் சவத்திப் பட்டணத்தில், ஒரு குடும்பத்தில் பிறந்தாள். இளையவள் ஒரு பேயாகப் பிறந்தாள்.*
*சவத்தியில் பிறந்த மூத்தவள் வளர்ந்து பெரியவளானபோது, புத்தர் பெருமான் சவத்திக்கு வருகை தந்திருந்தார். அப்போது அவள் புத்தர் பெருமானைச் சந்தித்து, அவருடைய உபதேச்தைக் கேட்டுப் பக்தி கொண்டாள்.*
*இவளுடைய பெற்றோர் இவளை அப்பட்டணத்தில் வாழ்ந்த ஓர் இளைஞனுக்குத் திருமணம் செய்து கொடுத்து, கணவன் வீட்டிக்கு அனுப்பி வைத்தார்கள். சிலகாலம் கழித்து அவளுக்கு ஒரு மகன் பிறந்தான்.*

****மன்னிப்பு***

ஒரு நாள் கணவன் வேலைக்குச் சென்றபின், இவள் தன் குழந்தையைத் தொட்டிலில் படுக்க வைத்து ஆட்டிக் கொண்டிருந்தாள். அப்போது பயங்கரமான தோற்றத்தைக் கொண்ட ஒரு பேய், திடீரெனத் தோன்றி, தொட்டிலை நோக்கி வந்தது. விவரிக்க முடியாத அச்சம் அவளைப் பற்றிக் கொண்டது. தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை வாரி மார்போடு அணைத்துக் கொண்டு, "புத்தர் பெருமான் ஒருவரால்தான் நம்மைக் காப்பாற்ற முடியும்," என எண்ணிக் கொண்டு, உள்ளத்தில் பக்தியுடன் புத்தர் பெருமான் தங்கியிருந்த மடத்திற்கு ஓடினாள்.

புத்தர் பெருமானிடம் இவள் கொண்டிருந்த பக்தி, இப்போது இவளுக்கும் இவள் குழந்தைக்கும் பாதுகாப்பு அளித்தது. அந்தப் பேயினால் இவர்களுக்குத் துன்பம் செய்ய முடியவில்லை. ஆனாலும் அது இவர்களைப் பின் தொடர்ந்து சென்றது.

அப்போது மடத்தில் புத்தர் பெருமான் தர்ம உபதேசம் செய்துகொண்டிருந்தார். மடத்திற்கு ஓடி வந்த இவள், குழந்தையைப் புத்தர் பெருமானின் பாதத்தில் வைத்துவிட்டு, மண்டியிட்டு, "பகவான், என் மகனுக்கும் எனக்கும் சரணமளியுங்கள்," என வேண்டிக் கொண்டாள். அவளைத், துரத்தி வந்த பேயினால் மடத்திற்குள் நுழைய முடியவில்லை. அது மடத்தின் வாயிலிலேயே நின்றுகொண்டது.

தம் சீடரிடம், "போய் அந்தப் பேயை உள்ளே அழைத்து வா," எனக் கூறினார் புத்தர் பெருமான். சீடர்

****மன்னிப்பு***

வாசலுக்குச் சென்று அந்தப் பேயை உள்ளே அழைத்து வந்தார். அந்தப் பேய் புத்தர் பெருமான் முன் வந்து நின்றது. புத்தர் பெருமான் அந்தப் பெண்ணிற்கும் பேய்க்கும் முற்பிறப்புகளில் அவர்களின் பகை எவ்வாறு தொடங்கியது என்பதை விளக்கினார்.

மலடியான முதல் மனைவி இரண்டாம் மனைவிக்கு உணவில் மருந்து கலந்து கொடுத்து கருச்சிதைவு செய்ததையும் இறக்கும் தருவாயில் இரண்டாம் மனைவி பழி வாங்க வேண்டும் எனச் சபதம் செய்துகொண்டு, உள்ளத்தில் பகையுடன் இறந்ததையும் இவர்களிடையே ஏற்பட்ட பகையின் காரணமாகப் பல பிறப்புகளில் எப்படி இவர்கள் ஒருவர் குழந்தையை மற்றவர் கொன்று, ஒருவருக்கொருவர் துன்பம் விளைவித்துக் கொண்டார்கள் என்பதையும் விளக்கிக் கூறினார்.

> "உங்களிடையே உள்ள பகைமை தணியாதவரை, எதிர்காலப் பிறப்புகளிலும் நீங்கள் தொடர்ந்து ஒருவருக்கொருவர் துன்பம் செய்துகொண்டு வேதனைப்படுவீர்கள்.

ஏனெனில்,

> இவ்வுலகில் எக்காலத்தும் பகைமை பகைமையால் தணிவதில்லை; அன்பினால்தான் தணியும்; இதுவே பண்டை அறநெறி.

*****மன்னிப்பு****

*என்னை நிந்தித்தான், என்னை அடித்தான், என்னை ஏமாற்றினான், என்னை இழிவு செய்தான், எனக்குத் துரோகம் செய்தான், என்னை வென்றான், என்னிடம் கொள்ளையிட்டான் என்பன போன்ற எண்ணங்கள் உங்கள் மனத்தில் இருக்கும்வரை, உங்களிடையே உள்ள பகைமை தணியாது. வெறுப்பு வெறுப்பை உண்டாக்கும். பகைமை பகைமையை உண்டாக்கும். அதன் காரணமாக ஒருவருக்கொருவர் கேடு செய்து கொள்வீர்கள். கடந்தகாலப் பிறப்புகளில் ஒருவருக்கொருவர் கேடு செய்து கொண்டதுபோல், எதிர்காலப் பிறப்புகளிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் கேடு செய்து கொண்டு துன்பத்தை அனுபவிப்பீர்கள்.*

*ஒருவரை ஒருவர் மன்னித்துவிடுங்கள். உள்ளத்தால் ஒருவரை ஒருவர் வெறுக்காதீர்கள். ஒருவர் மற்றவருக்குக் கேடு செய்ய எண்ண வேண்டாம். நல்லெண்ணங்களையும் அன்பான எண்ணங்களையும் எண்ணி, உள்ளத்தால் மற்றவர் நலனை விரும்புங்கள். உங்களுடைய பகைமை முடிவடையும். பகை முடிவடைந்தால் நீங்கள் ஒருவர் நலனை மற்றவர் விரும்பி, ஒருவருக்கொருவர் நன்மை செய்து நலம் பெறுவீர்கள்."*

*புத்தர் பெருமான் இவ்வாறு அறிவுரை கூறியதும் அந்தப் பெண்ணும் பேயும் ஒருவரையொருவர் மன்னித்துச் சமாதானம் செய்து கொண்டார்கள்.*

****மன்னிப்பு***

"உன் குழந்தையை அந்தப் பேயிடம் கொடு," என அந்தப் பெண்ணிடம் கூறினார் புத்தர் பெருமான்.

"பகவான் எனக்குப் பயமாக இருக்கிறது."

"பயப்பட வேண்டாம். உங்களிடையே இருந்த பகை தணிந்துவிட்டது. இனிமேல் அஞ்சுவதற்குக் காரணமெதுவும் இல்லை."

அந்தப் பெண் தன் குழந்தையை அந்தப் பேயிடம் கொடுத்தாள். அந்தப் பேய், குழந்தையை அன்புடன் தழுவியபின், திரும்பவும் அதன் தாயிடம் கொடுத்தது. பிறகு மண்டியிட்டுப் புத்தர் பெருமானை வணங்கி மரியாதை தெரிவித்தபின் அது சென்றுவிட்டது.

இவ்வாறாக அந்த இரு மனைவிகளுக்கிடையே ஏற்பட்ட பகைமை பல பிறப்புகளுக்குப் பின், புத்தர் பெருமானின் கருணையால் முடிவுக்கு வந்தது.

..........................................................................

முதல் மனைவிக்கும் இரண்டாம் மனைவிக்கும் ஏற்பட்ட பகைமை அப்பிறப்புடன் முடிவடையவில்லை. இந்தப் பகையின் காரணமாக அடுத்தடுத்து வந்த பிறவிகளிலும் இவர்கள் ஒருவருக்கொருவர் கேடு செய்து துன்புற்றார்கள். புத்தர் பெருமானைச் சந்தித்த பின்தான்,

*****மன்னிப்பு****

*தங்களிடையே உள்ள பகைமை தணியாதவரை தங்கள் துன்பம் முடிவுக்கு வராது என்பதை இவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இதை உணர்ந்ததும் ஒருவரை ஒருவர் மன்னித்து, சமாதானம் செய்து கொண்டனர். அத்துடன் அவர்களின் பகை தணிந்து விட்டது. பகைமை தணிந்ததும் ஒருவருக்கொருவர் இழைத்துக் கொண்ட துன்பங்கள் முடிவுக்கு வந்தன.*

*ஆகவே, நம் உள்ளத்தில் உள்ள பகைமை நமக்குத்தான் கேடு செய்யும் என்பதை உணர்ந்து பகைமையை விட்டுவிட வேண்டும். இல்லாவிடில், இந்த இரு மனைவிகளைப்போல், நாமும் ஒருவருக்கொருவர் கேடு செய்து துன்பப் படுவோம்.*

*தமக்குக் கேடு செய்தவருக்கும் பதிலுக்குக் கேடு செய்யாது பொறுத்துக் கொள்வதே அன்பும் அறனும் உடையவரின் பண்பு என்கிறார் திருவள்ளுவர்.*

***கறுத்து இன்னா செய்தவர் கண்ணும் - மறுத்தின்னா***
***செய்யாமை மாசற்றோர் கோள்.***

*அதாவது, மனத்தில் கறுவு கொண்டு ஒருவன் கேடு செய்தபோதிலும் திரும்பப் பதிலுக்கு அவனுக்குக் கேடு செய்யாதிருப்பதே, அன்பும் அறனும் உடையாரின் பண்பாகும். "இன்று இவன் செய்யும் கேடு, இவனிடமே திரும்பி வரும்; அப்போது இவன் துன்புற்று வருந்துவான்," என எண்ணி, உள்ளத்தில் இரக்கம் கொண்டு, தமக்குத் தீங்கு*

*****மன்னிப்பு****

*செய்தவருக்கும் பதிலுக்குத் தீங்கு செய்யார் அன்பும் அறனும் உடையார்.*

*துன்பச் செயல் பின்னால் துன்பத்தையே தருமாதலால், அறநெறியில் நிற்பவர், பகைகொண்டு பதிலுக்குத் துன்பச் செயலைச் செய்யார்.*

**செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத - செய்தபின்
உய்யா விழுமந் தரும்.**

*நீ எவருக்கும் ஒரு தீங்கும் செய்யாதிருக்க, உனக்கு ஒருவன் தீங்கு செய்தபோதிலும் பதிலுக்கு நீ அவனுக்குத் தீங்கு செய்யாதே. செய்தாயென்றால், பின்னால் நீ தப்ப முடியாத துன்பத்தையே அது உனக்குக் கொடுக்கும்.*

*புத்தர் பெருமானும் இவ்வாறு கூறியுள்ளார்:*

*தீய வினையைச் செய்யாது விடுதலே நலம்;
ஏனெனில் தீவினை பின்னால் துன்பத்தை
அளிக்கும். நல்வினை புரிவதே நலமாகும்;
அதனால் பின்னால் வருந்த நேராது.*

*ஆகவே, நமக்கு ஒருவர் தீங்கு செய்தபோது, பதிலுக்குத் தீங்கு செய்யாமல் மன்னித்து விட்டோமென்றால், அதனால் பின்னால் நாம் வருந்த நேராது.*

*எப்படி வருந்த நேராது?*

****மன்னிப்பு***

நாம் ஒருவரையொருவர் மன்னித்து விட்டோமென்றால், நம்மிடையே எழுந்த பகை தணிந்துவிடும். பகை தணிந்ததும் நாம் ஒருவருக்கொருவர் கேடு செய்ய எண்ணுவதையும் ஒருவருக்கொருவர் கேடு செய்வதையும் நிறுத்திவிடுவோம். நல்ல எண்ணங்களை எண்ணி, ஒருவர் நலனை மற்றவர் விரும்பி, ஒருவருக்கொருவர் நன்மை செய்து நலன் பெறுவோம். ஆகவே, ஒருவரையொருவர் மன்னிப்பதால், அதனால் பின்னால் வருந்த நேராது.

ஆனால் பகை கொண்டு பதிலுக்குத் தீங்கிழைத்தோமென்றால், அதனால் பின்னால் நாம் வருந்த நேரிடும்.

எவ்வாறு வருந்த நேரிடும்?

பகை கொண்டு பதிலுக்கு நாம் தீங்கு செய்தோமென்றால், மற்றவரும் நம்மீது பகை கொண்டு நமக்குத் தீங்கு செய்வார். இதன் முடிவு, நாம் ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் கேடு செய்து இருவரும் கெடுவதுதான்.

மேலும் நம் மனத்தில் உள்ள பகைமையும் வெறுப்பும் சினமும் நம் மன நிம்மதியை அழித்து, தூக்கத்தைக் கெடுத்து, உடல் நலத்தைப் பாதித்து, வியாதியை உண்டுபண்ணி, வேதனை செய்யும். மேலும் பகை கொண்டு நாம் செய்த தீவினை, இவ்வுலக வாழ்வு முடிவுற்றபின், மறு உலகில் நம்மை தீய கதிக்குள் தள்ளிவிடும். ஆகவே, பகை

*****மன்னிப்பு****

*கொண்டு பதிலுக்குத் தீங்கு செய்தோமென்றால், அதனால் பின்னால் நாம் வருந்த நேரிடும்.*

*புத்தர் பெருமானும் திருவள்ளுவரும் கூறுவதுபோல், நமக்குத் தீங்கு செய்தவரை மன்னிப்பதால், அதனால் பின்னால் நாம் வருந்த நேராது.*

................................................................................

## 2. i) *என்னை மன்னித்துவிடு*

*அது ஒரு பெரிய நிறுவனத்தின் தலைமை அலுவலகம்* (Head Office). *அங்கு ஆண்களும் பெண்களும் பணிபுரிந்து வந்தனர். அவர்களுள் சுந்தரியும் ஒருத்தி.*

*பல்கலைக்கழகப் படிப்பு முடிந்ததும் சுந்தரி அந்த நிறுவனத்தில் வேலைக்கு விண்ணப்பித்தாள். அவளுடைய அதிர்ஷ்டம் என்றுதான் கூற வேண்டும். தேர்வு செய்யப்பட்டவர்களில் சுந்தரியும் ஒருத்தி. கடந்த ஓராண்டு காலமாக இந்த அலுவலகத்தில் அவள் பணிபுரிந்து வருகிறாள். எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே ஊதியம் பெற்றாள். மேலும் அந்த வேலை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.*

****மன்னிப்பு***

அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த மற்றவர்களிடம் சுந்தரி நட்புடன் பழகினாள். ஆனாலும் அவளிடம் ஒரு தீய பழக்கம் இருந்தது. எவரையாவது இவளுக்குப் பிடிக்கவில்லை என்றால், அவரைப்பற்றிப் பொய்யான கதைகளைத் திரித்துப் பேசி, அவருக்குத் தீங்கு செய்யத் துணிந்து விடுவாள். மற்றவர் இவளுக்குத் தீங்கு எதுவும் செய்யாதிருந்த போதிலும் காரணமில்லாமலேயே உள்ளத்தில் பகை பாராட்டி, இல்லாததையும் பொல்லாததையும் புனைந்து, கதைகட்டிப் பேசி, மற்றவருக்குத் தீங்கிழைத்து அதில் மனம் பூரிப்படைவாள்.

பள்ளியில் பயிலும்போதே சுந்தரியிடம் இந்தத் தீய பழக்கம் இருந்தது. பல்கலைக் கழகத்தில் பயிலும்போதும் இப்படித்தான் அவதூறு பேசி மற்றவர்களுக்குத் தீங்கு விளைவித்தாள். இவளுடைய சுபாவத்தை அறிந்தவர்கள் இவளோடு நெருங்கிய நட்பு கொள்வதில்லை. இப்போது இவள் பணிபுரிந்த அலுவலகத்திலும் அந்தப் பழக்கத்தைத் தொடங்கிவிட்டாள்.

சுந்தரி பணிபுரியத் தொடங்கி ஓராண்டு காலத்திற்குப் பின், புதிதாக ஒரு பெண் அந்தத் தலைமை அலுவலகத்திற்கு வேலைக்கு வந்தாள். சுந்தரியைப் போலவே, புதிதாக வேலைக்கு வந்தவளும் பல்கலைக் கழகக் கல்வியை முடித்தவள்.

புதிதாக வந்தவளின் அடக்கமும் வணக்கமும் பணிவும் இனிய சுபாவமும் அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த

அனைவரையும் கவர்ந்தன. எல்லாரிடமும் அவள் பணிவோடு பேசி, இனிமையாக நடந்துகொண்டாள். மேலும் அவள் தன் கடமைகளைப் பொறுப்புடன் செய்து வந்ததால் மேலதிகாரிகளுக்கும் அவளை மிகவும் பிடித்துவிட்டது.

ஆனால் எதனாலோ, சுந்தரி முதல் நாளிலிருந்தே அந்தப் பெண்ணை வெறுத்தாள். அந்தப் பெண்ணின் புன்னகையையும் அடக்கத்தையும் இனிய நடத்தையையும் அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த மற்றவர்கள் அவளிடம் காட்டிய நட்பையும் சுந்தரி வெறுத்தாள். மேலும் தனக்குப் பின் வந்தவள், குறுகிய காலத்திலேயே மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டாள் என்பதை அறிந்ததும் அதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மற்றவள் இவளுக்குத் தீங்கு எதுவும் செய்யாமல் நட்புடன் நடந்து கொண்ட போதிலும் அவள் தனக்குப் பெருந்தீங்கு இழைத்துவிட்டதுபோல் மனத்தில் கறுவிக் கொண்டு அவளுக்குத் தீங்கு செய்யத் திட்டமிட்டாள் சுந்தரி.

ஏதோ சொல்லக்கூடாத ஓர் இரகசியத்தைப் பகிர்ந்து கொள்வதுபோல், அந்தப் பெண்ணைப் பற்றி மற்றவர்களிடம் பழித்துப் பேசத் தொடங்கினால் சுந்தரி. மிகத் திறமையாக அந்தப் பெண்ணைப் பற்றிப் பொய்யான கதைகளைத் திரித்துப் பேசி, அவளுடைய இனிமையான நடத்தை வெறும் நடிப்பு என்றும் நட்புக்கும் நம்பிக்கைக்கும் அவள் தகுதியற்றவள் என்றும் அவதூறு பேசி, அந்தப் பெண்ணின் நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தாள் சுந்தரி.

****மன்னிப்பு***

இந்தப் பொய்யான கதைகள் ஒருவர் வாயிலிருந்து இன்னொருவர் வாய் மூலமாக அந்த அலுவலகத்தில் பரவியது.

முன்பு அந்தப் பெண்ணிடம் நட்பு கொண்டிருந்தவர்கள், இப்போது அவள் நட்பை விரும்பாதவர்கள் போல் நடந்து கொண்டார்கள். அந்தப் பெண்ணின் நடத்தையைப் பற்றித் தங்களிடையே முணுமுணுத்துக் கொண்டார்கள். இவை யாவும் அந்தப் பெண்ணிற்குப் பெரும் வேதனையைத் தந்தன.

தன்னைப் பற்றி எவரோ பொய்யான புரளியைப் பரப்பித் தன் நற்பெயருக்குத் தீங்கு விளைவித்துள்ளார்கள் என்பதை அந்தப் பெண் யூகித்துக் கொண்டாள். இவளிடம் அனுதாபம் கொண்ட சிலர் அந்த அலுவலகத்தில் இருந்தார்கள். அவர்கள் மூலமாகத் தன்னைப் பற்றி அவதூறு பேசி தனக்குத் தீங்கிழைத்தவள் சுந்தரிதான் என்பதையும் அறிந்து கொண்டாள்.

ஒரு நாள், எல்லாருக்கும் முன் சுந்தரியிடம் அந்தப் பெண் கூறினாள்:

"தயவுசெய்து என்னைப் பற்றி அவதூறு பேசி என் நற்பெயரை அழிக்க வேண்டாம்."

*****மன்னிப்பு****

*அலுவலகத்தில் எல்லாருக்கும் முன் இப்படி அந்தப் பெண் தன்மீது குற்றம் சாட்டுவாள் என்று சுந்தரி சற்றும் எதிர்பார்க்கவில்லை.*

*அந்தப் பெண் தன்னை அவமானப் படுத்திவிட்டதாக எண்ணிச் சினமடைந்த சுந்தரி, "உன்னைப் பற்றி மற்றவர்கள் அவதூறு பேசினால் என்னை ஏன் குறை கூறுகிறாய். போய் அவர்களிடம் சொல்," எனச் சுருக்கென்று பதிலளித்தாள்.*

*இதைக் கேட்ட மற்றவர்கள், "இவள்தானே அந்தப் பெண்ணைப் பற்றி கதைகள் கூறினாள். இப்போது நம்மீது பழி சுமத்துகிறாளே! இவளிடம் உண்மையில்லை. இவள் கூறிய கதைகளை உண்மை என்று நம்பி, அந்தப் பெண்ணைப் பற்றிப் பிறரிடம் பழித்துப் பேசிவிட்டோமே; நிந்தனை செய்து அவள் மனத்தைப் புண்படுத்திவிட்டோமே." என எண்ணி வருந்தினார்கள்.*

*இடைவேளையின்போது அந்த அலுவலகத்தில் பணிபுரிந்தவர்களில் சிலர், அவதூறு பேசியதற்காக அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். அதுபோலவே சிலர், அலுவலக நேரம் முடிந்து வீடு திரும்பும்போது, அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். புன்னகையுடன் அவர்களை மன்னித்து அவர்களுடன் மீண்டும் தன் நட்பைப் புதுப்பித்துக் கொண்டாள் அந்தப் பெண்.*

****மன்னிப்பு***

இதையெல்லாம் பார்த்த சுந்தரிக்கு, அந்தப் பெண்மீதும் அவளிடம் மன்னிப்புக் கோரி நட்பைப் புதுப்பித்துக் கொண்டவர்கள் மீதும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அடுத்த சில நாள்கள் உடல் நலமில்லை எனக் காரணம் கூறி, சுந்தரி வேலைக்கு வரவில்லை.

மறுபடியும் வேலைக்குத் திரும்பி வந்தவள், எல்லாரும் தனக்குத் தீங்கு விளைவித்து விட்டது போலவும் எவருடைய நட்பையும் தான் விரும்பாதவள் போலவும் நடந்து கொண்டாள்.

அந்த அலுவலகத்தில் சாந்தி என்ற ஒரு பெண்ணும் பணி புரிந்து வந்தாள். கடந்த இருபது ஆண்டுகளாக அந்த நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த சாந்தி, இன்னும் மூன்று ஆண்டுகளில் பணிஓய்வு பெற இருந்தாள்.

இவள் மதங்களையும் இலக்கியங்களையும் விரிவாகக் கற்றவள். வாழ்க்கை அனுபவம் நிறைந்தவள். தம் கடமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி, அனைவரிடமும் நியாயமாக நடந்து கொள்வாள். இவளுடைய கல்வியையும் அறிவுடைமையையும் கண்ட அந்த அலுவலகத்தில் பணி புரிந்தவர்கள், மேலதிகாரிகள் உட்பட, இவளுக்குப் பெரும் மரியாதை செலுத்தினார்கள். தங்களுடைய பிரச்சினைகளை இவளிடம் கூறி அறிவுரை கேட்பார்கள்.

புதிதாக வந்த பெண்ணைப் பற்றிச் சுந்தரி அவதூறு பேசி அவளுக்குத் தீங்கு விளைவித்ததைச் சாந்தியும்

அறிவாள். இப்போது சுந்தரி எல்லாரிடமும் விரோதியைப் போல் நடந்து கொள்வதைப் பார்த்த சாந்தி, "இவள் தன் குற்றத்தை உணரவில்லை. தன் குற்றத்தை உணராதவரை, வெறுப்பும் பகையும் இவள் மனத்தை விட்டு அகலாது," என் எண்ணிய சாந்தி, அலுவலக நேரம் முடிந்து வீடு திரும்பும்போது,, சுந்தரியை அணுகி, அவளுடைய நலனை விசாரித்தபின், வார இறுதியில் தம் வீட்டிற்கு வரும்படி அவளை அழைத்தாள்.

கடந்த சில நாள்களாக எல்லாரிடமும் விரோதமாக நடந்துகொண்ட சுந்தரி, இப்படி ஒர் ஆழைப்பைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தன்னைவிட வயதிலும் கல்வியிலும் அனுபவத்திலும் முதிர்ந்த சாந்தியின் அழைப்பைச் சுந்தரியினால் மறுக்க முடியவில்லை. அழைப்பை ஏற்றுச் சாந்தியின் வீட்டிற்குச் சென்றாள். சாந்தி சுந்தரியை வரவேற்று, தேநீரும் பலகாரங்களும் கொடுத்து உபசரித்தாள். பிறகு தம் படிப்பகத்திற்கு அவளை அழைத்துச் சென்றாள்.

"முக்கியமான விஷயங்களைப் பேசுவதென்றால் நான் இங்குதான் வருவேன். நீ எனக்கு என் மகளைப் போன்றவள். நான் ஒரு கதை கூறப் போகிறேன். கவனமாகக் கேள். அது உனக்கு நன்மை பயக்கும்," எனக்கூறி, "காற்றில் இறகுகள்," என்ற கதையைக் கூறத் தொடங்கினாள்.

*************************************************

****மன்னிப்பு***

## ii) காற்றில் இறகுகள்

(நாவைக் காப்பது மிகவும் முக்கியம். இதை விளக்கும் ஒரு யூதர் கதை இது.)

முன்னொரு காலத்தில் ஒரு பட்டணத்தில் பெண்ணொருத்தி வாழ்ந்து வந்தாள். இவளிடம் அவதூறு பேசும் தீய பழக்கம் இருந்தது. அண்டை வீட்டாரைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் புனைந்து கதை பேசிப் புரளியைக் கிளப்பிவிடுவாள். இவள் கதையைக் கேட்டவர் அதை வேறொருவரிடம் கூறுவார்; அதை அவர் மற்றவர்களிடம் கூறுவார். இப்படியாக அந்த அவதூறு அந்தப் பட்டணம் முழுதும் பரவிவிடும். இது பலருக்குத் தீங்கு விளைவித்தது. தான் பேசிய அவதூறு பலருக்குத் தீங்கு விளைவிப்பதை இவள் உணரவில்லை.

இவள் பேசிய அவதூற்றினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பெண், தங்கள் மதகுருவான ரபியிடம் சென்று முறையிட்டாள். ரபி அவதூறு பேசியவளை அழைத்தார்.

அவதூறு பேசியவள் வந்ததும் "என்னைப் பற்றி அவதூறு பேசி என் நற்பெயரை நீ அழித்துவிட்டாய்," எனப் பாதிக்கப்பட்டவள் குற்றம் சாட்டினாள்.

"நான் பேசிய வார்த்தைகளைத் திரும்ப எடுத்துக் கொள்கிறேன்," என்றாள் அவதூறு பேசியவள்.

****மன்னிப்பு***

"உன் வார்த்தைகளை நீ திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது," எனக் கூச்சலிட்டாள் பாதிக்கப் பட்டவள்.

"நிச்சயம் முடியும். உன்னைப் பற்றி நான் பேசிய வார்த்தைகளை, நான் திரும்ப எடுத்துக் கொள்கிறேன்; என்றாள் அவதூறு பேசியவள்.

இதைக் கேட்ட ரபி, "இவள் தன் குற்றத்தை உணரவில்லை. அவதூறு தீங்கு விளைவிக்கும் என்பதை இவள் உணராதவரை, இவள் மீண்டும் மீண்டும் அவதூறு பேசுவாள். இவளுக்கு இதைப் புரிய வைக்க வேண்டும்," என எண்ணி, அவளிடம் இவ்வாறு கூறினார்:

"பிறரைப் பற்றி இழிவாகப் பேசுவது குற்றம். நீ அதற்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும். நாளைக்கு வா, அதைப்பற்றிக் கூறுகிறேன்."

மறுநாள் அவள் வந்தாள். அவளிடம் ஒரு பை நிறைய இறகுகளைக் கொடுத்துக் கூறினார்: "வீதிகளில் செல். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஓர் இறகைப் போடு. பிறகு திரும்பி வா. இதுதான் நீ செய்ய வேண்டிய பிராயச்சித்தம்.

அவள் திகைப்புற்றாள். ஆனாலும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. அந்தப் பையை எடுத்துக் கொண்டு வீதிகளில் சென்றாள். ஒவ்வொரு வீட்டு வாசலின் முன்னும் ஓர் இறகைப் போட்டுவிட்டுத் திரும்பி வந்தாள்.

****மன்னிப்பு***

"பிராயச்சித்தத்தின் முதல் பாகத்தை நீ செய்துவிட்டாய். இப்போது இரண்டாம் பாகத்தைச் செய். நீ சென்ற பாதையில் திரும்பிச் சென்று, நீ போட்ட எல்லா இறகுகளை திரும்பவும் பொறுக்கி எடுத்துக் கொண்டு வா," எனக் கூறினார் ரபி.

"ரபி, இதைச் செய்ய முடியாது. இந்நேரம் காற்று எல்லா இறகுகளையும் அடித்துச் சென்றிருக்கும். அந்த இறகுகளைப் பொறுக்கி எடுப்பதென்பது சாத்தியமாகாது."

"அதுபோல்தான், உன் அண்டை வீட்டாரைப் பற்றி நீ பேசிய பொய்யான அவதூறு வார்த்தைகளை நீ திரும்ப எடுக்க முடியாது. நீ பேசிய பொய்யான அவதூறு வார்த்தைகள், ஒருவர் வாயிலிருந்து இன்னொருவர் வாய் மூலமாக எங்கெல்லாம் பரவியிருக்கும் என்பதை நீ அறிவாயா? நீ அவற்றைப் பின் தொடர்ந்து சென்று அவற்றைத் திருப்பி எடுத்துக் கொள்ள முடியாமா?"

"முடியாது ரபி."

"காற்றில் அடித்துச் செல்லப்பட்ட இறகுகளைப் போல், உன் அண்டை வீட்டாரைப் பற்றி நீ பேசிய பொய்யான வார்த்தைகள் இந்தப் பட்டணத்தில் பரவி, அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதே.

****மன்னிப்பு***

மறந்தும் இனிமேல் உன் அண்டை வீட்டாரைப் பற்றி அவதூறு பேசாதே. உன்னைப் பற்றிப் பிறர் அவதூறாகப் பேசி,உன் நற்பெயரைக் கெடுத்து, உனக்குத் துன்பம் விளைவித்தால், நீ அதை விரும்பமாட்டாய். அது போல்தான் பிறரும். ஆகவே, நாவைக் காத்துக் கொள். இப்போது அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்று, உன் குற்றத்தை ஒப்புக் கொண்டு, அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேள்," என ரபி கூறினார்.

தன் குற்றத்தை உணர்ந்துகொண்ட இவள் மற்றப் பெண்ணின் வீட்டிற்குச் சென்றாள்.

"நான் பேசிய வார்த்தைகளைத் திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது என்பதை இப்போது நான் புரிந்து கொண்டேன். உங்களுக்குத் துன்பம் விளைவித்ததற்காக நான் மனம் வருந்தித் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள்," என மன்னிப்புக் கேட்டாள்.

மற்றவள் இவளை மன்னித்துவிட்டாள். அதுமுதல் இருவரும் தோழிகளாகிவிட்டனர். அவதூறு பேசி வந்தவள், அன்றிலிருந்து அண்டை வீட்டாருக்குக் கெடுதி விளைவிக்கும் சொற்களை ஒருபோதும் பேசுவதில்லை.

*****மன்னிப்பு****

*'காற்றில் இறகுகள்,' என்ற இக்கதையைக் கேட்டபின், அவதூறு பேசுவது பிறருடைய நற்பெயரைக் கெடுத்துத் துன்பம் விளைவிக்கும் என்பதை இப்போது சுந்தரி உணர்ந்து கொண்டாள்.*

*சாந்தி தொடர்ந்து கூறினாள்: "ஒருநாள் அலுவலக நேரம் முடிந்து நான் வீடு திரும்பும்போது, நம் அலுவலகத்திற்குப் புதிதாக வந்துள்ள பெண் என்னிடம் வந்து, தனிப்பட்ட முறையில் என்னிடம் பேச விரும்புவதாகவும் நான் சம்மதித்தால் வார இறுதியில் என் வீட்டிற்கு வருவதாகவும் கேட்டுக் கொண்டாள். நானும் சம்மதித்தேன்.*

*வார இறுதியில் அவள் என் வீட்டிற்கு வந்தாள். உன்னைப் பற்றிக் கெடுதியாகவோ, இழிவாகவோ எவரிடமும் தான் பேசவில்லையென்றும் உன்னிடம் நட்புடன்தான் பழகியதாகவும் ஆனால் அலுவலகத்தில் நீ அவளைப் பற்றி அவதூறு பேசி, அவளுடைய நற்பெயரைக் கெடுத்து வருவதாகவும் அதனால் தன் மன அமைதி பாதிக்கப்பட்டு, அலுவலகத்தில் தன் கடமைகளை முன்புபோல் செய்ய முடியவில்லையென்றும் கூறி அழுதாள்."*

*இதைக் கேட்டதும் அந்தப் பெண்ணிற்குத் தான் அநீதி இழைத்து விட்டது போன்ற குற்ற உணர்ச்சி சுந்தரியின் மனத்தில் எழுந்தது. "காரணமற்ற பகைமையினால் அந்தப் பெண்ணிற்குப் பெருந்துன்பம் இழைத்துவிட்டோமே," என எண்ணி வருந்தினாள்.*

*****மன்னிப்பு****

*சாந்தி தொடர்ந்து கூறினாள்:*

*"அலுவலகத்தில் பலருக்கு முன் அந்தப் பெண் உன் மீது குற்றம் சாட்டி, உன்னை அவமானப் படுத்திவிட்டதாக. எண்ணி, அவள் மீது நீ பகைமை கொண்டுள்ளாய். அலுவலகத்தில் பணிபுரியும் மற்றவர்களிடமும் முன்புபோல் நீ பழகுவதில்லை. உன் மனத்தைச் சினமும் பகையும் வெறுப்பும் ஆட்கொண்டுள்ளன.*

*உன் மனத்தில் உள்ள சினமும் பகைமையும் வெறுப்பும். உன்னைத்தான் வருத்தி உனக்குத்தான் வேதனையைத் தரும். அலுவலகத்திலும் உன் மன அமைதியைக் கெடுத்து உனக்கு வேதனை தரும். வீட்டிலும் உன் மன அமைதியைக் கெடுத்து உனக்கு வேதனை தரும்; உன் தூக்கத்தைக் கெடுக்கும்; உன் நலனைக் கெடுத்து வியாதியை உண்டாக்கும். அந்தப் பெண்ணின் நிலையும் இதுதான்.*

*உங்கள் மனத்தில் வெறுப்பும் சினமும் பகைமையும் இருக்கும்வரை, நீங்கள் இருவரும் ஒருவர் மற்றவருக்குக் கேடு எண்ணி, ஒருவருக்கொருவர் கேடு செய்து இருவரும் துன்பப்படுவீர்கள்.*

*ஒருவரை ஒருவர் மன்னித்து விடுங்கள். உள்ளத்தால் ஒருவரை ஒருவர் வெறுக்காதீர்கள்; ஒருவர் மற்றவருக்குக் கேடு எண்ண வேண்டாம். நல்லெண்ணங்களையும் அன்பான எண்ணங்களையும் எண்ணி, உள்ளத்தால் மற்றவர் நலனை விரும்புங்கள். உங்களுடைய பகைமை முடிவடையும்.*

****மன்னிப்பு****

*நீங்கள் இருவரும் உங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டு, ஒருவரையொருவர் மன்னித்து விட்டீர்கள் என்றால், உங்களிடையே ஏற்பட்டுள்ள பகைமை தணிந்துவிடும். அப்போது அலுவலகத்திற்கு மகிழ்ச்சியுடன் வந்து, மகிழ்ச்சியுடன் பணிபுரிந்து; அலுவலகத்திலுள்ள மற்றவர்களுடன் நட்புடன் பழகி; வேலை முடிந்தபின் மகிழ்ச்சியுடன் திரும்பிப் போகலாமே."*

*இதைக் கேட்ட சுந்தரி, தன் மனத்தில் உள்ள வெறுப்பும் சினமும் பகையும் தனக்குத்தான் கேடு செய்யும் என்பதை உணர்ந்து கொண்டாள். சில நாள்களாகவே தன் உள்ளத்தில் இருந்து வந்த வேதனை இப்போது விலகிவிட்டதுபோல் உணர்ந்தாள்.*

*"தங்களுடைய அறிவுரைக்கு மிக்க நன்றி. எனக்கு அது மிகவும் தேவை. நான் அதைக் கடைப்பிடிக்கிறேன். தாங்கள் கூறியதுபோல், என் மனத்திலுள்ள சினமும் பகைமையும் வெறுப்பும் என் அறிவைக் கெடுத்து எனக்குத்தான் கேடு செய்யும். நாளைக்கே அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்," எனக்கூறி விடைபெற்றுச் சென்றாள்.*

*சுந்தரி சென்றபின், சாந்தி தொலைபேசி வழி புதிதாக வந்த அந்தப் பெண்ணிற்கும் அறிவுரை கூறி, ஒருவரையொருவர் மன்னித்துச் சமாதானம் செய்துகொள்ளும்படி அறிவுறுத்தினாள்.*

****மன்னிப்பு***

அலுவலகத்தில் மறுநாள், "தங்களைப் பற்றிப் பிறரிடம் குறைகூறி தங்களுக்குத் துன்பம் இழைத்ததற்காக நான் மனம் வருந்தித் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள்." என அந்தப் பெண்ணிடம் சுந்தரி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

அந்தப் பெண்ணும் "அலுவலகத்தில் மற்றவர்களுக்கு முன் தங்கள் மீது குற்றம் சுமத்தித் தங்களுக்கு வேதனை ஏற்படுத்தியதற்காக மனம் வருந்தித் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்," எனச் சுந்தரியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

அதன் பிறகு இருவரும் தோழிகளாகிவிட்டார்கள். அலுவலகத்தில் பணிபுரிந்த யாவரும் இவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

..................................................................................

*****மன்னிப்பு****

## 3. *மாயத்துண்டு*

*(இது ஒரு ஜப்பானிய நாட்டுக் கதை.)*

*வெகுகாலத்திற்கு முன் ஒரு கிராமத்தில் ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். சிறு வயதிலேயே அவளிடம் நல்ல பண்புகள் இருந்தன. அடக்கமும் தயாள சிந்தனையும் நேர்மையும் அவளுக்கு இயல்பான குணங்கள். சிறியோர், பெரியோர் எல்லாரிடமும் இனிமையாகப் பேசி அன்பாக நடந்து கொண்டாள்.*

*தான் கோபம் அடையுமாறு பிறர் நடந்து கொண்டாலும்கூட, இவள் பொறுமை காத்துக்கொள்வாள். சினங்கொண்டு சிடுசிடுவென சினத்தைக் காட்டமாட்டாள்.*

*அவள் முகத்தில் அமைதியும் தெளிவும் காண்போரைக் கவரும் சாந்தமும் இருந்தன. அவளுடைய அகத்தின் அழகை முகம் தெளிவாக எடுத்துக் காட்டியது.*

*அவள் திருமண வயதை அடைந்ததும் அவளுடைய பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்துவைத்து கணவருடன் அனுப்பி வைத்தார்கள். அவள் கணவன், வயதான தன் தாயாருடன் பக்கத்துக் கிராமத்தில் வாழ்ந்து வந்தான்.*

****மன்னிப்பு***

இந்தப் பெண்ணின் மாமியார் குணத்தில் இந்தப் பெண்ணிற்கு எதிர்மாறானவள். மாமியார் சுயநலம் மிகுந்தவள்; கொடிய சுபாவம் படைத்தவள்; உள்ளத்தில் அன்பும் அனுதாபமும் இல்லாதவள்; எளிதில் கோபமடைவாள். அற்ப விஷயங்களுக்கெல்லாம் சினங் கொண்டு, முகத்தில் சிடுசிடுவெனச் சினத்தைக் காட்டுவாள். வீட்டில் காலை முதல் மாலைவரை எப்பொழுதும் எவரையாவது குறைகூறிக் கொண்டுதான் இருப்பாள்; பிறர் குறைகளைத் தேடி, பிறரை நிந்தனை செய்த இவள் தம் குறைகளைக் காணவில்லை.

முதல் நாளிலிருந்தே மருமகளை மாமியார் ஆணையிட்டு அதிகாரம் செய்யத் தொடங்கினாள். அந்த இளம் பெண்ணின் அடக்கத்தையும் இனிய சுபாவத்தையும் வயதான மாமியார் வெறுத்தாள்.

மருமகள் வீட்டு வேலைகளைப் பொறுப்போடு செய்த போதிலும் மாமியார் அதில் குறை காண்பாள்; மறுபடியும் அதைச் செய்யச் சொல்வாள்; முணுமுணுப்பாள்; கடிந்து கொள்வாள். ஆனாலும் தீய இயல்புள்ள மாமியாரின் குணத்தை அறிந்த மருமகள், யாவற்றையும் பொறுத்துக் கொண்டாள்; வயதான மாமியாரிடம் இனிமையாகப் பேசி, அன்பாக நடந்து கொண்டாள். இது மாமியாரை மேலும் கோபப்படுத்தியது.

ஒரு நாள் மருமகளிடம் பலகாரம் செய்யம்படி மாமியார் கூறினாள். மருமகள் பலகாரங்களைச் செய்ததும் மாமியார் அவற்றை எண்ணி ஒரு தட்டில் அடுக்கி வைத்துவிட்டு, ஏதோ வேலையாக வெளியே சென்றாள்.

****மன்னிப்பு***

மாமியார் சென்றபின், வெளியூரிலிருந்து வந்திருந்த ஒரு பௌத்த பிக்கு (Buddist Monk) வீட்டு வாசலில் வந்து யாசித்து நின்றார். தட்டில் இருந்த பலகாரங்களில் ஒன்றை எடுத்துப் பிக்குவிற்குக் கொடுத்தாள் அந்த இளம் பெண்.

சற்று நேரத்திற்குப் பின் திரும்பி வந்த மாமியார், பலகாரங்களை எண்ணிப் பார்த்தாள். ஒன்று குறைவதைக் கண்டு சினங்கொண்டு,

"என்ன செய்தாய் ஒரு பலகாரத்தை?' என மருமகளிடம் கத்தினாள்.

"ஒரு பிக்கு வீட்டு வாசலில் வந்து யாசித்து நின்றார். அவருக்கு ஒரு பலகாரம் கொடுத்தேன்," என மருமகள் பதில் கூறினாள்.

இதைக் கேட்ட மாமியார் மேலும் சினங்கொண்டு, “என் பொருளை என்னைக் கேட்காமலே ஒரு பிக்குவிற்குக் கொடுத்தாயா? நீ சாப்பிட்டுவிட்டுத் தானம் செய்ததாகக் கூறுகிறாயா? உடனே போய் அதைப் பெற்று வா," எனக் கூச்சலிட்டாள்.

சற்றுத் தொலைவில் நடந்து சென்று கொண்டிருந்த பிக்குவிடம் ஓடி வந்தாள் அந்த இளம் பெண். பிக்குவிடம் மன்னிப்புக் கோரிய பின், "நான் தங்களுக்கு வழங்கிய பலகாரத்தைத் தயவு செய்து திருப்பிக் கொடுங்கள்," எனக் கேட்டாள்.

****மன்னிப்பு***

அந்தப் பிக்கு புன்னகை செய்தவாறே தம் பிச்சைத் தட்டிலிருந்த பலகாரத்தை எடுத்து அவளிடம் கொடுத்தார், பிறகு, ஒரு சிறிய துண்டை (சிறு துணி) அவளிடம் கொடுத்துக் கூறினார்: "உன் முகத்தைத் துடைக்க இதைப் பயன்படுத்திக் கொள். உன் மாமியார் உன்னைக் கொடுமையாக நடத்துகிறாள் என்பதை நான் அறிவேன்," என்றார்.

அதுமுதல் அந்த இளம் பெண் தினமும் காலையில் முகம்கழுவியபின், அந்தத் துணியால் முகத்தைத் துடைத்துக் கொள்வாள். அவள் முகத்தின் அழகும் பொலிவும் இனிமையும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வந்தன. மருமகளின் அழகும் பொலிவும் பெருகுவதைக் கண்ட மாமியார் இன்னும் பொறாமை கொண்டாள்.

"இவள் அழகு நாளுக்குநாள் அதிகரிக்கிறதே! காரணம் என்னவாக இருக்கும்?" என எண்ணிய மாமியார், ஒருநாள் காலையில் ஒளிந்திருந்து மருமகள் என்ன செய்கிறாள் என இரகசியமாகக் கவனித்தாள்.

அந்த இளம் பெண் தன் முகத்தை ஒரு துண்டால் துடைப்பதையும் ஒவ்வொரு தடவையும் அவள் தன் முகத்தைத் துடைத்தபோது, அவளுடைய முகத்தின் அழகும் பொலிவும் பெருகுவதையும் பார்த்த மாமியார்.

"இவள் ஒரு மாயத்துண்டை உபயோகிக்கிறாள்!" என முணுமுணுத்துக் கொண்டாள்.

****மன்னிப்பு***

மறுநாள் மருமகளை ஒரு வேலையாக வெளியே அனுப்பிவிட்டு, அந்த மாயத் துண்டைத் திருடிக் கொண்டாள் மாமியார்.

மாமியார் தம் முகத்தை அந்த மாயத் துண்டால் துடைத்தாள். பிறகு கண்ணாடியில் தம் முகத்தைப் பார்த்தாள். மாறுதல் எதுவும் தோன்றவில்லை. எப்போதும்போல் சுருக்கம் விழுந்த முகத்தைத்தான் பார்த்தாள்.

"எனக்கு வயதாகிவிட்டது. ஆகவே, பலதடவை துடைக்க வேண்டும்," எனக் கூறிக் கொண்டு, பலதடவை தன் முகத்தை அந்தத் துண்டால் துடைத்தாள். பிறகு கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துத் திகிலுற்றாள். அவள் முகம் மாறத் தொடங்கியது.

சுருக்கம் விழுந்த முகம் நீளமாகி கழுதை முகமாக மாறியது. பிறகு குரங்கு முகமாக மாறியது; அடுத்துச் சீறித் தீண்டும் நாகமாக மாறியது; இறுதியாகப் பார்ப்போர் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தும் பயங்கரமான பேய் முகமாக மாறியது. கிழவி அச்சத்தால் அலறிக் கொண்டு தரையில் விழுந்தாள்.

அப்போது வெளியில் சென்றிருந்த மருமகள் வீடு திரும்பினாள். வீட்டில் ஒரு பேய் இருப்பதைப் பார்த்துப் பயந்து வெளியே ஓடினாள்.

"மருமகளே, என்னைக் காப்பாற்று," எனக் கிழவி கதறினாள்.

****மன்னிப்பு***

தன் மாமியாரின் குரலைக் கேட்ட அந்த இளம் பெண், நின்று திரும்பிப் பார்த்தாள்.

"உன் மாயத்துண்டால் என் முகத்தைத் துடைத்தேன். என் முகம் பேய் முகமாக மாறிவிட்டது. மருமகளே, என்னைக் காப்பாற்று. பழைய முகத்தை நான் திரும்பப் பெறுவதற்கு உதவிசெய்," எனக் கெஞ்சினாள் கிழவி.

"நான் என் முகத்தை அந்த மாயத்துண்டால் துடைத்தபோது, என் முகத்தின் அழகும் பொலிவும் பெருகியது. ஆனால் இவள் முகம்பேய் முகமாக மாறிவிட்டதே! காரணம் என்னவாக இருக்கும்? இவள் என்னை எப்படியெல்லாம் கொடுமையாக நடத்தினாள்," இவ்வாறு எண்ணிய அந்த இளம் பெண், மறுகணமே தன் எண்ணங்களை மாற்றிக் கொண்டாள்.

"பாவம், நான் இவளுக்கு உதவ வேண்டும். அந்தப் பிக்கு ஒருவரால்தான் இவளைக் குணப்படுத்த முடியும். அவரை எங்குக் கண்டு பிடிப்பது? ஒருவேளை கிராமத்திற்கு வெளியே இருக்கும் ஆலயத்திற்கு அவர் சென்று இருக்கலாம்," என எண்ணிக் கொண்டு, கிராமத்திற்கு வெளியே இருந்த ஆலயத்திற்கு ஓடினாள். வழியில் அந்தப் பிக்குவைச் சந்தித்தாள். அவரிடம் நடந்தவற்றைக் கூறினாள்.

"கொடியவர்கள் அந்தத் துண்டை உபயோகித்தால், அவர்கள் முகம் பேய் முகமாக மாறிவிடும்," எனப் பிக்கு கூறினார்.

****மன்னிப்பு***

இப்போது அந்தப் பெண்ணிற்குத் தன் மாமியாரின் முகம் பேய் முகமாக மாறியதன் காரணம் புரிந்துவிட்டது.

"இதைக் குணப்படுத்த முடியாதா?" எனப் பிக்குவிடம் கேட்டாள்.

"குணப்படுத்த முடியும். உன் மாமியார் உன்னைக் கொடுமைப் படுத்தியதை எண்ணி இப்போது வருந்துகிறாள். உன் உள்ளத்தால் நீயும் அவளை மன்னித்துவிட்டாய். உன் மாமியாரிடம் அந்தத் துண்டின் மறுபக்கத்தால் அவள் முகத்தைத் துடைத்துக் கொள்ளச் சொல். தன் மனித முகத்தை அவள் திரும்பப் பெறுவாள்," எனப் பிக்கு கூறினார்.

அந்தப் பெண் வீட்டிற்கு ஓடிவந்து மாமியாரிடம் அதைக் கூறினாள். மாமியார் உடனே அந்தத் துண்டின் மறுபக்கத்தால் தம் முகத்தைத் துடைத்தாள்.

முதல் முறை துடைத்தபோது அவள் முகம் பேய் முகத்திலிருந்து சீறும் நாகத்தின் முகமாக மாறியது; இரண்டாவது முறை துடைத்தபோது அது குரங்கு முகமாக மாறியது; மூன்றாவது முறை துடைத்தபோது அவள் முகம் கழுதை முகமாக மாறியது; நான்காவது முறை துடைத்தபோது அவள் முகம் சுருக்கம் விழுந்த மனித முகமாக மாறிவிட்டது.

அந்த வயதானவள் தம் மருமகளைக் கட்டி அணைத்துக் கொண்டு அழுதாள்.

****மன்னிப்பு***

"அன்பு மகளே! உன்னை வெறுத்து, கடுஞ்சொற்களைப் பேசிக் கொடுமையாக நடத்தினேன். என்னை மன்னித்துவிடு," எனக்கூறித் தன்னை மன்னித்துவிடும்படி அந்த இளம் பெண்ணிடம் கெஞ்சினாள் அந்த வயதானவம்மை.

அதுமுதல் அந்த வயதானவள், ஒருபோதும் சிடுசிடுப்பான சொற்களைப் பேசுவதில்லை; சினங்கொள்வதில்லை. தம் மருமகளைப் போல் இவளும் எல்லாரிடமும் அன்பாகப் பேசி அடக்கமாகவும் பணிவாகவும் நடந்து கொண்டாள். தயாள சிந்தையுடன் பிறருக்கு உதவினாள்.

இப்போது மருமகளை இவள் ஆணையிட்டு அதிகாரம் செய்வதில்லை. மருமகளோடு சேர்ந்து தாமும் வீட்டு வேலைகளைச் செய்தாள். மருமகளிடம் அன்பாகப் பேசினாள்; மாமியாரும் மருமகளும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள்,

"என்றாவது ஒரு நாள் அந்தப் பிக்கு நம் கிராமத்திற்குத் திரும்பி வருவார்; அப்போது அவருக்கு நன்றி கூற வேண்டும்," என அந்த வயதானவள் எதிர்பார்த்திருந்தாள். ஆனால் அந்த பிக்கு அந்தக் கிராமத்திற்குத் திரும்பி வரவேயில்லை.

****மன்னிப்பு***

## 4. பகைமை பகைமையால் தணிவதில்லை

முன்னொரு காலத்தில் இந்தியாவில் கோசாம்பி என்ற ஒரு பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்து மக்களில் பலர் புத்தர் பெருமானிடம் பக்தி கொண்டு, அவர் அருளிய உபதேசங்களை ஏற்று, அதற்கு ஒப்ப வாழ்ந்து வந்தனர். சிலர் காவி உடை அணிந்து துறவு வாழ்வை மேற்கொண்டனர். (காவி உடை அணிந்து துறவு வாழ்வு வாழும் புத்தர் பெருமானின் சீடர்கள் பிக்குகள் என அழைக்கப்பட்டனர்.)

காவி உடை அணிந்த பிக்குகளிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு இரு பிரிவினராகப் பிரிந்து விட்டார்கள். ஒரு தரப்பினர் மற்றத் தரப்பினரைக் குறை கூறினார்கள். மற்றத் தரப்பினர் இவர்களைக் குறை கூறினார்கள். பிக்குகளுக்குள் ஏற்பட்ட இந்தப் பிளவு அவர்களோடு மட்டும் நிற்காமல், கோசாம்பிப் பட்டணத்து மக்களிடையேயும் பரவியது. அதன் காரணமாக அந்தப் பட்டணத்து மக்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து விட்டார்கள்.

இரு கட்சிகளாகப் பிரிந்த மக்கள், ஒரு கட்சியினர் மற்றக் கட்சியினரைக் குறைகூறி, பழித்துப் பேசி, நிந்தனை செய்து பகைமை பாராட்டி வந்தார்கள்.

****மன்னிப்பு***

மக்களிடையே ஏற்பட்ட பகைமையைத் தணிப்பதற்காகப் புத்தர் பெருமான் இந்தக் கதையைக் கூறினார்:

வெகு காலத்திற்கு முன் இந்தியாவில் இரு நாடுகள் இருந்தன. அவற்றில் ஒன்று காசி. மற்றொன்று கோசலம் இரு நாடுகளும் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக இருந்தன.

காசி மிகப்பெரிய நாடு. வளமான, செழிப்பான செல்வம் மிகுந்த நாடு. அதன் தலைநகரம் பெனாரஸ். காசி நாட்டை மன்னர் பிரம்ம தத்தர் ஆண்டு வந்தார். பிரம்ம தத்தரிடம் சக்தி வாய்ந்த ஒரு பெரிய போர்ப்படை (இராணுவம்) இருந்தது.

காசிக்கு அருகில் இருந்த கோசல நாடு சிறியது; வளம் குறைந்தது; ஏழ்மையானது. கோசல நாட்டை மன்னர் திக்கித்தர் ஆண்டு வந்தார். சிறிய, வளம் குறைந்த, ஏழ்மையான நாட்டை ஆண்ட திக்கித்தரிடம் வீரர்கள் சிலரைக் கொண்ட ஒரு சிறிய போர்ப்படைதான் இருந்தது.

"மன்னர் திக்கித்தரிடம் சிறிய போர்ப்படைதான் உள்ளது. கோசலத்தை மிக எளிதில் தோற்கடிக்கலாம்," இவ்வாறு எண்ணிய காசி நாட்டு மன்னர், கோசல நாட்டைப் போரில் வெற்றி கொள்ளத் தீர்மானித்தார். பிறகு ஒரு பெரும் படையுடன் தம் தலைநகரிலிருந்து காசி நாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

****மன்னிப்பு***

காசி நாட்டு மன்னர் ஒரு பெரும் படையுடன் கோசல நாட்டை நோக்கி வருவதைக் கேள்விப்பட்டார் மன்னர் திக்கித்தர்.

"என் சிறிய படை பிரம்ம தத்தரின் சக்தி வாய்ந்த படையை எதிர்க்க முடியாது. அப்படியே எதிர்த்தாலும் போரில் தோல்வியுறுவது திண்ணம். போரில் மக்கள்தான் துன்புறுவார்கள். போரையும் இரத்தம் சிந்துவதையும் தவிர்ப்பதுதான் சிறந்த வழி,"இவ்வாறு எண்ணிய திக்கித்தர், மந்திரிகளுடன் கலந்து ஆலோசித்தார். பிறகு தம் சிறு படையை சரணடைந்து விடுமாறு கூறிவிட்டு, அவரும் இராணியும் மாறுவேடத்தில் கோசல நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

மாறுவேடத்தில் தம் நாட்டை விட்டு வெளியேறிய திக்கித்தர், பிரம்ம தத்தரின் தலைநகரான பெனாரசுக்குச் சென்றார்.

"பெனாரஸ் பெரிய பட்டணம்; மக்கள் தொகை மிகுந்தது; இங்கு மக்கள் மத்தியில் மறைந்து வாழலாம். பிரம்ம தத்தர் என்னை இங்குக் கண்டு பிடிக்க முடியாது. மேலும் தம் தலைநகரில் என்னை அவர் தேடமாட்டார்." இவ்வாறு எண்ணிய திக்கித்தர், பெனாரஸ் பட்டணத்தில் ஏழைக் குயவர்கள் வாழ்ந்த பகுதிக்குச் சென்று அவர்கள் மத்தியில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார்.

*****மன்னிப்பு****

*சில காலம் சென்றபின், இராணிக்கு ஒரு மகன் பிறந்தான். அந்தக் குழந்தைக்குத் திக்காவு என்று பெயரிட்டார்கள். திக்காவு வளர்ந்து பெரியவன் ஆனதும் மன்னர் திக்கித்தர் இவ்வாறு எண்ணினார்:*

*“பிரம்ம தத்தர் எனக்கு அதிகத் தீங்கு செய்துள்ளார். அவருடைய தலைநகரில் நாங்கள் மாறுவேடத்தில் வாழ்வதை அறிந்தாரென்றால் எங்கள் மூவரையும் கொன்றுவிடுவார். இளம் திக்காவுவை எப்படிக் பாதுகாப்பது? திக்காவுவைப் பட்டணத்திற்கு வெளியே தங்க ஏற்பாடு செய்வோம். அப்போது அது அவனுக்குப் பாதுகாப்பாக இருக்கும்." என எண்ணிய திக்கித்தர், இளம் திக்காவுவைப் பட்டணத்திற்கு வெளியே தங்கிக் கல்வி கற்க ஏற்பாடு செய்தார்.*

*மன்னர் பிரம்ம தத்தருக்கு முடிதிருத்துபவர் ஒருவர் இருந்தார். முன்பு இவர் கோசல நாட்டு மன்னர் திக்கித்தருக்கும் முடி திருத்துபவராக இருந்தவர். சந்தையில் ஒரு நாள், மாறுவேடத்திலிருந்த திக்கித்தரை இவர் அடையாளம் கண்டு கொண்டார்.*

*"கோசலத்தை விட்டு ஓடிவந்த மன்னர் திக்கித்தர், இங்குதான் மாறுவேடத்தில் வாழ்கிறார். இவர் எங்குத் தங்கி இருக்கிறார் என்பதைக் கண்டு பிடிப்போம். மன்னர் பிரம்ம தத்தரிடம் இச்செய்தியைத் தெரிவித்தால் சன்மானம் வழங்குவார்," இவ்வாறு எண்ணிய அந்த முடிதிருத்துபவர், திக்கித்தரை அவர் அறியாமல் பின் தொடர்ந்து சென்று,*

****மன்னிப்பு***

ஏழைக் குயவர்கள் வாழும் பகுதியில் ஒரு குடிசையில் அவர் இராணியுடன் வாழ்வதைக் கண்டு கொண்டார்.

பிறகு அவ்வட்டாரத்து மக்களிடம் விசாரித்துத் திக்கித்தருக்கு ஒரு மகன் இருப்பதாகவும் அவன் வேறு எங்கோ தங்கியிருப்பதாகவும் தெரிந்து கொண்டார். சன்மானம் பெறலாம் என எண்ணி மன்னர் பிரம்ம தத்தரிடம் சென்று இதைத் தெரிவித்தார்.

கோசல நாட்டு மன்னர் திக்கித்தர் மாறுவேடத்தில் மறைந்து வாழ்கிறார் என்பதைக் கேள்விப்பட்ட பிரம்ம தத்தர்,

“திக்கித்தர் எனக்குப் பகைவர். என் தலைநகரில் ஏன் மாறுவேடத்தில் அவர் வாழ்கிறார்? என்னைக் கொன்று தம் நாட்டை மீண்டும் அடைவதற்காகத்தான் அவர் இவ்வாறு மறைந்து வாழ்கிறார். எமக்கு அவர் கேடு செய்வதற்குமுன், நான் அவரை அழித்துவிட வேண்டும்," என எண்ணினார்.

தம் காவலர்களை அழைத்து, "பட்டணத்தில் குயவர்கள் வாழும் பகுதிக்குச் செல்லுங்கள். திக்கித்தரும் அவர் இராணியும் மாறுவேடத்தில் அங்கு வாழ்கிறார்கள். அவர்களைக் கைது செய்து, தலையை மொட்டையடித்து, கைகளைக் கட்டி எல்லாரும் காணுமாறு பட்டணத்து வீதிகளில் கொண்டு செல்லுங்கள். பட்டணத்துக்கு வெளியே கொண்டு சென்று, தலையை வெட்டுங்கள். ஈமச் சடங்கு செய்ய எவரையும் அனுமதிக்க வேண்டாம். விலங்குகளும் பறவைகளும் அவர்களின் உடலைத் தின்னட்டும்," எனக் கட்டளையிட்டார்.

****மன்னிப்பு***

"நீண்டகாலமாக என் பெற்றோரை நான் பார்க்கவில்லை," என எண்ணிய இளவரசர் திக்காவு, த பெற்றோரைக் காண்பதற்காக அன்று பட்டணத்திற்கு வந்தார். பட்டணத்திற்குள் நுழைந்த இளவரசர் திக்காவு, தன் பெற்றோரைத் தலையை மொட்டையடித்து, கைகளைப் பின்பக்கம் கயிற்றால் பிணைத்துக் கட்டி, இழுத்துச் செல்வதைப் பார்த்தார். வீதியின் இரு பக்கங்களிலும் மக்கள் கூட்டமாகக் கூடிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தன் பெற்றோருக்கு உதவச் சக்தியற்ற நிலையில், கூட்டத்தில் ஒருவராக நின்று பார்த்தார் இளவரசர் திக்காவு.

கூட்டத்தினரிடையே திக்காவு நிற்பதை மன்னர் திக்கித்தர் பார்த்தார். தம் மகனுக்கு அறிவுரை கூற விரும்பினார் மன்னர் திக்கித்தர். இளவரசரைக் காட்டிக் கொடுக்காமல் இருப்பதற்காக எவரிடமோ கூறுவதுபோல் கூறினார்.

"என் அன்புத் திக்காவு,

தூரப் பார்க்காதே!

கிட்டப் பார்க்காதே!

பகைமை ஒருபோதும் பகைமையால் தணிவதில்லை;
பகைமை அன்பினாலேயே தணியும்."

திக்கித்தர் இவ்வாறு கூறியதும் வீதியின் இரு பக்கங்களிலும் கூடியிருந்த மக்கள் பேசிக் கொண்டார்கள்:

****மன்னிப்பு***

"யார் இந்தத் திக்காவு? இவர் என்ன சொல்கிறார்? பைத்தியம் பிடித்துவிட்டது போலும். ஏதோ பிதற்றுகிறார்."

மக்கள் கூட்டம் இவ்வாறு பேசியதைக் கேட்ட திக்கித்தர்,

"எனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை; நான் பிதற்றவும் இல்லை; புத்தியுள்ளவர் புரிந்து கொள்வார்," எனக் கூறினார்.

காவலர்கள் திக்கித்தரையும் இராணியையும் பட்டணத்திற்கு வெளியே கொண்டு சென்று, தண்டனையை நிறைவேற்றினார்கள். ஈமச் சடங்குகள் செய்வதைத் தடுப்பதற்காகச் சில காவலர்களை அங்கு நிறுத்திவிட்டு மற்றவர்கள் சென்றுவிட்டார்கள்.

இளவரசர் திக்காவு தனக்குள் கூறிக் கொண்டார்: "முதலில் என் பெற்றோருக்கு ஈமச் சடங்குகள் செய்வேன். பிறகு, பழிவாங்க ஒரு வழியைத் தேடுவேன்."

அன்றிரவு பட்டணத்தில் சாராயம் வாங்கிக் கொண்டு காவலர்களிடம் சென்றார். காவலர்கள் சாராயத்தை அருந்திவிட்டு மயக்கத்தில் உறங்கிவிட்டார்கள். திக்காவு கட்டைகளை அடுக்கி, அதன்மேல் பெற்றோரின் சடலங்களை வைத்து தீ மூட்டினார். பிறகு இரு கைகளையும் கூப்பி, எரிந்து கொண்டிருந்த சிதையை மூன்று தடவை சுற்றி வந்தார்.

****மன்னிப்பு***

அந்தச் சமயத்தில் தன் அரண்மனையின் மேல்மாடியில் உலாவிக் கொண்டிருந்த மன்னர் பிரம்ம தத்தர், பட்டணத்திற்கு வெளியே எரியும் நெருப்பையும் அதை ஒரு உருவம் மூன்று தடவை சுற்றி வருவதையும் பார்த்தார்.

"திக்கித்தருக்கு வேண்டியவர் எவரோ ஈமச் சடங்கு செய்கிறார். ஒருகால் இவர் திக்கித்தரின் மகனாக இருக்கலாம். என்னைப் பழிவாங்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இவன் காத்திருப்பான். இனிமேல் எனக்கு நிம்மதியில்லை," எனத் தமக்குள் கூறிக் கொண்டார் பிரம்ம தத்தர்.

இளவரசர் திக்காவு, தன் பெற்றோருக்கு ஈமச் சடங்குகள் செய்தபின், காட்டிற்குள் சென்றார். காட்டில் சில நாள்கள் தங்கி, தன் பெற்றோருக்காக கண்ணீர் சிந்தி அழுதார்.

"என் தந்தையின் நாட்டைக் கைப்பற்றியதோடு மட்டுமின்றி, குற்றமற்ற என் பெற்றோரின் தலைகளை மொட்டையடித்து, கைகளைப் பின்புறம் கயிற்றால் பிணைத்துக் கட்டி, எல்லாரும் பார்க்க வீதிகளில் அவர்களை இழுத்துச் சென்று, கொலை செய்துவிட்டார் பிரம்ம தத்தர். பழிக்குப் பழி வாங்க வேண்டும்," என பழிவாங்கத் திட்டமிட்டார் இளவரசர்.

****மன்னிப்பு***

பிறகு பட்டணத்திற்குள் நுழைந்து, அரண்மனைக்கு அருகில் இருந்த யானை இலாயத்திற்குச் சென்றார். மன்னரின் யானைகளை அங்குத் தங்க வைத்திருந்தார்கள். யானைப் பாகனிடம் தனக்கு யானைகளைப் பழக்கும் கலையைக் கற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார் இளவரசர். யானைகளைப் பழக்குபவர் ஒத்துக் கொண்டு, "இலாயத்தில் தங்கி, இந்தக் கலையைக் கற்றுக் கொள், எனக் கூறினார்.

ஒரு நாள் அதிகாலையில், பொழுது விடிவதற்குமுன், திக்காவு எழுந்து இனிமையான குரலில் பாடினார். அப்போது மன்னர் பிரம்ம தத்தர், பயங்கரக் கனவு கண்டு, அச்சத்தால் உள்ளம் படபடக்க விழித்தெழுந்தார். திக்காவு பாடுவதைச் கேட்ட மன்னர்,

"எவ்வளவு இனிமையான குரல்; இது எனக்குச் சாந்தியளிக்கும்," எனத் தமக்குள் கூறிக்கொண்டார். பிறகு பணியாள்களை அழைத்து விசாரித்தார்.

"மன்னரே, அவர் யானை இலாயத்தில் வேலை செய்யும் ஓர் இளைஞன். அவர் புதிதாக வேலைக்கு வந்தவர்," எனப் பணியாள்கள் கூறினார்கள்.

"அந்த இளைஞனை இங்கு அழைத்து வாருங்கள்," என மன்னர் கட்டளையிட்டார்.

பணியாள்கள் திக்காவுவை மன்னர் முன் கொண்டு வந்தார்கள்.

****மன்னிப்பு***

பாடியது நீ தானா?"

"ஆம் மன்னரே."

"இன்னும் ஒரு முறை பாடு."

திக்காவு இனிமையான குரலில் பாடினார். மன்னர் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது.

"இளைஞரே, அரண்மனையில் தங்கி, எனக்கும் பணிவிடைகள் செய்," என்றார் மன்னர்.அதுமுதல் மன்னருக்குப் பணிவிடைகள் செய்து வந்தார் திக்காவு.

மன்னருக்கு முன் எழுந்து, அவருக்குப் பின் படுக்கச் சென்று, மன்னரின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து, இனிமையாகப் பேசி, மன்னரின் மனம் நோகாமல் நடந்து கொண்டார் திக்காவு. விரைவில் மன்னரின் நம்பிக்கையைப் பெற்றார் திக்காவு.

ஒரு நாள் காட்டிற்குச் சென்று வேட்டையாட விரும்பினார் மன்னர். திக்காவுவிடம் அவர் இவ்வாறு கூறினார்:

"நான் வேட்டையாடச் செல்ல விரும்புகிறேன் இன்று என் தேரை நீ ஓட்டு."

பரிவாரங்கள் பின் தொடர, மன்னரின் தேரை ஓட்டிச் சென்றார் திக்காவு. காட்டில் வேட்டையாடும்போது,

****மன்னிப்பு***

திக்காவு தேரை மிகவும் திறமையாகச் செலுத்தி மன்னரின் பரிவாரத்தினரிடமிருந்து பிரிந்து சென்றார். மன்னரை அவருடைய பரிவாரத்தினரிடமிருந்து பிரித்து, வெகு தூரத்திற்குக் காட்டிற்குள் தேரை ஓட்டிச் சென்றார். திக்காவு.

திட்டமிட்டு, வேண்டுமென்றே பரிவாரத்தினரிடமிருந்து திக்காவு பிரிந்து வந்ததை அறியாத மன்னர், காட்டில் வழி தவறிவிட்டதாகக் கருதினார்.

"இளைஞரே, தேரை நிறுத்து. நாம் இங்கு காத்திருப்போம். பரிவாரத்தினர் நம்மைத் தேடிக் கொண்டு வருவார்கள்." எனத் திக்காவுவிடம் கூறினார் மன்னர். திக்காவு தேரை நிறுத்தினார்.

"எனக்குக் களைப்பாக இருக்கிறது. நான் சற்றுப் படுத்து ஓய்வு எடுத்துக் கொள்ள வரும்புகிறேன்," என்றார் மன்னர்.

திக்காவு தேரில் இருந்து கீழே இறங்கி, ஒரு மரத்தின் அடியில் தரையில் அமர்ந்தார்.

"மன்னரே, என் மடியில் தலை வைத்துப் படுத்து ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.," என மன்னரிடம் கூறினார் திக்காவு. திக்காவுவின் மடியில் தலை வைத்துப் படுத்து உடனே உறங்கிவிட்டார் மன்னர். திக்காவு தனக்குள் இவ்வாறு எண்ணினார்:

****மன்னிப்பு***

"இந்தக் காசி நாட்டு மன்னர் எங்கள் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார். எங்கள் நாட்டுச் சொத்தை இவர் திருடிக் கொண்டார். குற்றமற்ற என் தாயையும் தந்தையையும் தலையை மொட்டையடித்து, கைகளைப் பின்பக்கம் கயிற்றால் பிணைத்துக் கட்டி, எல்லாரும் பார்க்க வீதிகளில் அவர்களை இழுத்துச் சென்று, தலைகளை வெட்டிக் கொலை செய்துவிட்டார் இந்தப் பிரம்ம தத்தர். எங்களுக்கு மிக அதிமான தீமைகளைச் செய்துள்ளார் இந்த மன்னர். பழி வாங்குவதற்கு இதுவே சரியான தருணம்."

தன் வாளை இறுகப் பற்றி, அதை உறையிலிருந்து மெதுவாக உருவினார். தன் மடியில் தலை வைத்து உறங்கிக்கொண்டிருந்த மன்னரைப் பழிவாங்குவதற்காக வாளை உயர்த்தினார் திக்காவு. அப்போது திக்காவுவின் மனத்தில் அவர் தந்தையின் கடைசி வார்த்தைகள் நினைவுக்கு வந்தன:

"என் அன்புத் திக்காவு,

தூரப் பார்க்காதே,

கிட்டப் பார்க்காதே,

பகைமை ஒருபோதும் பகைமையால் தணிவதில்லை.

பகைமை அன்பினாலேயே தணியும்."

****மன்னிப்பு***

"என் தந்தையின் கடைசி வார்த்தைகளை மீறுவது எனக்குப் பொருத்தமன்று," என்று தனக்குள் கூறிக் கொண்டு, உயர்த்திய வாளை மெதுவாக உறையில் வைத்தார் திக்காவு.

ஆனால் மறுபடியும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணங்கள் அவர் மனத்தில் எழுந்தன. இரண்டாவது தடவை வாளை உருவி உயர்த்தினார். தன் தந்தையின் கடைசி வார்த்தைகளை எண்ணி, மீண்டும் வாளை உறையில் வைத்தார்.

“இந்தக் காசி மன்னர், எங்கள் நாட்டைக் கைப்பற்றி, என் பெற்றோரைக் கொலை செய்துவிட்டார். இவரைப் பழிவாங்க வேண்டும்," என எண்ணி மூன்றாவது தடை வாளை உருவஙினார். அப்போது மறுபடியும் அவருடைய தந்தையின் கடைசி வார்த்தைகள் அவர் மனத்தில் எழுந்தன:

"என் அன்புத் திக்காவு,

தூரப் பார்க்காதே!

கிட்டப் பார்க்காதே!

பகைமை ஒருபோதும் பகைமையால் தணிவதில்லை,

பகைமை அன்பினாலேயே தணியும்!

****மன்னிப்பு***

என் தந்தையின் கடைசி வார்த்தைகளை மீறுவது எனக்குப் பொருத்தமன்று," எனத் தனக்குள் கூறிக் கொண்டு, உயர்த்திய வாளை மெதுவாக உறையில் வைத்தார்.

அப்போது, உறங்கிக் கொண்டிருந்த பிரம்ம தத்தர், திடீரெனக் கண் விழித்து எழுந்து உட்கார்ந்தார். அச்சத்தால் அவர் உள்ளம் படபடத்தது.

"மன்னரே, என்ன நடந்தது? ஏன் அச்சத்தால் நடுங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?" எனத் திக்காவு கேட்டார்.

"என்னை அடிக்கடி வருத்தும் ஒரு கனவு இது. கோசல நாட்டு மன்னன் திக்கித்தரின் மகன் உருவிய வாளுடன் என்னைக் கொல்ல வருவதாகக் கனவு கண்டேன்," என்றார் பிரம்ம தத்தர்.

அச்சத்தால் தாம் திடீரென விழித்தெழுந்ததற்கான காரணத்தை மன்னர் கூறியதும் திக்காவு தன் இடது கையை மன்னரின் தலைமீது வைத்தபடி வலது கையால் இடுப்பிலிருந்த வாளை உருவினார்.

"மன்னரே, நான்தான் கோசல நாட்டு மன்னர் திக்கித்தரின் மகன் இளவரசன் திக்காவு. எங்களுக்குத் தாங்கள் பெருந்தீங்கிழைத்துள்ளீர்கள். எங்கள் நாட்டையும் சொத்துகளையும் அபகரித்துக் கொண்டீர்கள். என் தாயையும் தந்தையையும் கொலை செய்தீர்கள். பழி தீர்க்கக் காலம் வந்துவிட்டது," எனக் கூறி வாளை உயர்த்தினார்.

****மன்னிப்பு***

மன்னர் பிரம்ம தத்தர் திக்காவு முன் மண்டியிட்டு, தன்னை மன்னித்துவிடும்படி கெஞ்சிக் கேட்டார். "திக்காவு என்னை மன்னித்துவிடு. திக்காவு எனக்கு வாழ்வு அளி."

அப்போது திக்காவுவின் மனத்தில் அவர் தந்தையின் கடைசி வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

“பகைமை ஒருபோதும் பகைமையால் தணிவதில்லை.
பகைமை அன்பினாலேயே தணியும். ”

தன் தந்தையின் இந்தக் கடைசி வார்த்தைகளின் பொருளை இப்போது திக்காவு புரிந்துகொண்டார். தன் நன்மையைக் கருதி, தன் தந்தை கூறிய கடைசி வார்த்தைகளின் பொருள் விளங்கியதும் அதுவரை திக்காவுவின் உள்ளத்தில் இருந்து வந்த பகைமை தணிந்துவிட்டது.

"மன்னரே, இப்போது நான் உங்களுக்கு வாழ்வு அளித்தால், பிறகு என் பெற்றோரைக் கொன்றதுபோல், ஒருகால் என்னையும் நீங்கள் கொல்வீர்கள். நீங்கள்தான் எனக்கு வாழ்வு அளிக்க வேண்டும்."

"அப்படியாயின், நீ எனக்கு வாழ்வு அளி. நான் உனக்கு வாழ்வு அளிக்கிறேன்," என்றார் மன்னர் பிரம்ம தத்தர். மன்னர் இவ்வாறு கூறியதும் திக்காவு உருவிய வாளை மீண்டும் உறையில் வைத்தார்.

*****மன்னிப்பு****

*பிறகு இருவரும் ஒருவர் கையை மற்றவர் பற்றி, ஒருவருக்கு ஒருவர் தீங்கு செய்வதில்லை எனச் சத்தியம் செய்து கொண்டனர்.*

*"திக்காவு, உன் தந்தையின் இறுதி வார்த்தைகளை நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு. அவருடைய இறுதி வார்த்தைகளின் பொருள் என்ன?"*

*மன்னரே, என் தந்தையின் இறுதி வார்த்தைகளின் பொருள் இதுதான்:*

*"தூரப் பார்க்காதே."*

- *நீண்ட காலத்திற்குப் பகையை மனத்தில் வைத்திருக்காதே.*

*"கிட்டப் பார்க்காதே."*

- *அவசரப்பட்டு நண்பர்களிடமிருந்து விலகிக் கொள்ளாதே.*

*"பகைமை ஒருபோதும் பகைமையால் தணிவதில்லை."*

*மன்னரே, என் தாயையும் தந்தையையும் தாங்கள் கொலை செய்துவிட்டீர்கள். பழி தீர்ப்பதற்காக நான் தங்களைக் கொன்றால், தங்கள் மக்கள் என்னைக் கொல்வார்கள். பிறகு என் மக்கள் தங்கள் மக்களைக் கொல்வார்கள். இது தொடரும். ஆக, பகைமை ஒருபோதும் பகைமையால் தணிவதில்லை.*

****மன்னிப்பு***

"பகைமை அன்பினாலேயே தணியும்."

"மன்னரே, இப்போது தாங்கள் எனக்கு வாழ்வு அளித்துவிட்டீர்கள்; நான் தங்களுக்கு வாழ்வு அளித்துவிட்டேன். நாம் ஒருவரை ஒருவர் மன்னித்துவிட்டதால், நம்மிடையே உள்ள பகை தணிந்துவிட்டது."

திக்காவு இவ்வாறு விளக்கமளித்ததும் "அற்புதம்! இளம் திக்காவு எவ்வளவு நுண்ணறிவு உள்ளவர்! தன் தந்தை சுருக்கமாகக் கூறியதன் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொண்டார்," என மன்னர் பிரம்ம தத்தர் தமக்குள் எண்ணிக் கொண்டார். பிறகு கூறினார்:

"திக்காவு, புத்தியுள்ளவர் புரிந்து கொள்வார்," என உன் தந்தை கூறியது எவ்வளவு உண்மை! புத்தியுள்ளவர்தான் இதைப் புரிந்துகொள்வார்."

மன்னரைத் தேடிக் கொண்டு அவருடைய பரிவாரத்தினர் அப்போது அங்கு வந்து சேர்ந்தார்கள். எல்லாரும் அரண்மனைக்குத் திரும்பி வந்தார்கள்.

அரண்மனைக்குத் திரும்பி வந்த மன்னர், மந்திரிகளையும் படைத் தளபதிகளையும் அழைத்துக் கூறினார்:

****மன்னிப்பு***

"கோசல நாட்டு மன்னர் திக்கித்தரின் மகன் இளவரசர் திக்காவுவை நீங்கள் பார்த்தீர்கள் என்றால், என் செய்வீர்கள்?"

சிலர் கூறினார்கள்: "மன்னரே, அவன் நம் பகைவன் அவனைப் பார்த்தால் அவன் கைகளை வெட்டுவோம்."

சிலர் கூறினார்கள், "மன்னரே, அவன் நம் பகைவன் அவனைப் பார்த்தால் அவன் கால்களை வெட்டுவோம்."

சிலர் கூறினார்கள், "மன்னரே, அவன் நம் பகைவன், அவனைப் பார்த்தால் அவன் கைகளையும் கால்களையும் வெட்டுவோம்."

சிலர் கூறினார்கள், "மன்னரே, அவன் நம் பகைவன். அவனைப் பார்த்தால் அவன் தலையை வெட்டுவோம்."

மந்திரிகளும் தளபதிகளும் இவ்வாறு கூறியதும் மன்னர் பிரம்ம தத்தர் தம் அருகில் நின்று கொண்டிருந்த திக்காவுவை அவர்களுக்கு அறிமுகம் செய்தார்.

"இவர்தான் கோசல நாட்டு மன்னர் திக்கித்தரின் மகன், இளவரசர் திக்காவு. நாங்கள் ஒருவரை ஒருவர் மன்னித்து விட்டோம். இவருக்கு எவரும் தீங்கிழைக்கக் கூடாது என நான் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்."

பிறகு, மன்னர் பிரம்ம த்த்தர் திக்காவுவிடம் கூறினார்:

"திக்காவு, உன் தந்தை இறப்பதற்கு முன், இவ்வாறு உன்னிடம் கூறினார்:

என் அன்புத் திக்காவு,

தூரப் பார்க்காதே,

கிட்டப் பார்க்காதே,

பகைமை ஒருபோதும் பகைமையால் தணிவதில்லை,

பகைமை அன்பினாலேயே தணியும்.

உன் தந்தையின் இந்த இறுதி வார்த்தைகளின் பொருள் என்ன?"

தன் தந்தையின் இறுதி வார்த்தைகளின் பொருளைத் திக்காவு விளக்கிக் கூறினார். திக்காவு கூறிய விளக்கத்தைக் கேட்ட மந்திரிகளும் தளபதிகளும்

பகைமை பகைமையைத்தான் வளர்க்கும்.

பகைமை பகைமையால் தணிவதில்லை.

பகைமை அன்பினாலேயே தணியும்.

எனத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். புரிந்ததும் அதுவரை அவர்கள் உள்ளங்களில் இருந்த பகைமையும் தணிந்துவிட்டது.

பிறகு மன்னர் பிரம்ம தத்தர்,கோசல நாட்டையும் அந்நாட்டிலிருந்து தாம் கைப்பற்றிய பொருள்களையும் திக்காவுவிடம் திருப்பி ஒப்படைத்துவிட்டர்.

---

## 5. *புனிதர் பிரான்சிஸ்*

புனிதர் பிரான்சிஸ் (Saint Francis) பதின்மூன்றாம் நூற்றாண்டில் இத்தாலியில் வாழ்ந்தார். அவரைப் பற்றிய பல கதைகள் உண்டு. அதில் ஒரு கதை இது.

முற்காலத்தில் இத்தாலியில் குப்பியோ (Gubbio) என்ற ஒரு சிறிய பட்டணம் இருந்தது. அது ஒரு மலைப்பிரதேசப் பட்டணம். பட்டணத்தைச் சுற்றிலும் உயர்ந்த மலைகள் இருந்தன. மலைகளில் புல்வெளிகளும் காடுகளும் இருந்தன. அங்குள்ள மக்கள் மலைகளில் இருந்த புல்வெளிகளுக்குத் தம் ஆடுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வந்தார்கள்.

புனிதர் பிரான்சிஸ் வாழ்ந்த காலத்தில், குப்பியோ பட்டணத்திற்கு அருகில் இருந்த காடுகளில் ஓர் ஓநாய் தோன்றி, இரை தேடி அலைந்தது. அது மிகப்பெரிய ஓநாய்.

****மன்னிப்பு***

அது ஆடுகளையும் நாய்களையும் கொன்று விழுங்கியது. மலைகளில் ஆடுகளை மேய்த்த ஆட்டிடையர்கள் பலர் அந்தக் கொடிய மிருகத்தின் பசிக்கு இரையானார்கள்.

பட்டணத்தைவிட்டுத் தனியாக வெளியே சென்ற மனிதர்களையும் அது கொன்று விழுங்கியது. அதன் காரணமாகப் பட்டணத்திற்கு வெளியில் செல்ல மக்கள் அஞ்சினார்கள். அக்காலத்துப் பட்டணங்களைப் போல் குப்பியோ பட்டணத்தைச் சுற்றிலும் பெரிய மதிற்சுவர் இருந்தது. ஓநாய்பட்டணத்திற்குள் நுழைந்துவிடுமோ என அஞ்சிய மக்கள், பட்டணத்து வாயிலை இரவில் மூடினர்கள்.

பட்டணத்திற்கு வெளியே செல்லும்போது, போருக்குச் செல்வதுபோல் ஆயுதங்களுடன் மக்கள் கூட்டமாகச் சென்றார்கள். இரவு வேளைகளில் வீடுகளின் கதவுகளைத் தாளிட்டு மூடிக் கொண்டு, அந்த நான்கு கால் பகைவனைப் பற்றிக் கதைகள் கூறினார்கள் குப்பியோ பட்டணத்து மக்கள்.

எப்படி ஓர் ஆட்டிடையன் தன் கொழுத்த ஆட்டை இழந்துவிட்டான்; எப்படி மற்றொருவன் தன் இரு நாய்களை இழந்துவிட்டான்; எப்படி ஆயுதமில்லாமல் தனியாக வந்த ஒரு பயணி உயிரிழந்தார். இவ்வாறெல்லாம் பட்டணத்து மக்கள் கதைகள் கூறினார்கள்.

புனிதர் பிரான்சிஸ் இத்தாலி நாட்டில் பல ஊர்களுக்குச் சென்று மக்களுக்கு உபதேசம் செய்து வந்தார்.

****மன்னிப்பு***

அப்போது ஒருநாள் புனிதர் பிரான்சிஸ் குப்பியோ பட்டணத்திற்கு வந்தார். அந்த ஓநாய் தங்களை எவ்வாறு பயமுறுத்தி வருகிறது என்பதைப் பட்டணத்து மக்கள் அவரிடம் கூறினார்கள்.

பட்டணத்தை விட்டு வெளியே செல்ல அஞ்சி வாழ்ந்த மக்கள்மீது இரக்கம் கொண்ட புனிதர் பிரான்சிஸ், அந்த ஓநாயைச் சந்திக்கத் தீர்மானித்தார். தாம் மட்டும் தனியாக வெளியே சென்று, அந்த ஓநாயைச் சந்திக்கப் போவதாக மக்களிடம் கூறினார். "அது ஒரு பயங்கரமான மிருகம், தனியாக வெளியே போக வேண்டாம்," எனக் கூறி மக்கள் அவரைத் தடுத்தார்கள்.

"இறைவன் என்னைக் காப்பார்," எனக் கூறிய புனிதர் பிரான்சிஸ், பட்டணத்தைவிட்டு வெளியேறி மலைகளை நோக்கித் தனியாக நடந்து சென்றார்.

புனிதர் பிரான்சிஸ் ஒரு துறவி. அவரிடம் ஆயுதம் எதுவும் இல்லை. இறைவனிடம் பக்தியும் உயிர்களிடத்து அன்பும்தான் அவரிடமிருந்த ஆயுதங்கள். இதைத் தவிர்த்து, அவரிடம் ஆயுதம் வேறு எதுவும் இல்லை. இறைவனிடம் பக்தியும் உயிர்களிடத்து அன்பும் - இந்த ஆயுதங்களுடன் அந்தப் பயங்கரமான ஓநாயைச் சந்திக்கத் தனியாகச் சென்றார் புனிதர் பிரான்ஸிஸ்.

அவருக்குத் துணையாகச் சிலர் உடன் சென்றார்கள். ஆனால் பட்டணத்து வாயிலை விட்டுச் சற்று தூரம்

****மன்னிப்பு***

சென்றதும் அச்சம் அவர்களைப் பற்றிக் கொண்டது. தொடர்ந்து செல்ல மறுத்துவிட்டனர். புனிதர் பிரான்சிஸ் சிறிதும் அச்சமின்றித் தனியாக நடந்து சென்றார்.

திடீரெனக் காட்டிலிருந்து வாயைத் திறந்துகொண்டு, புனிதர் பிரான்சிஸை நோக்கி ஓடி வந்தது அந்த ஓநாய். அது அருகில் வந்ததும் தம் கையை உயர்த்தி, "ஓநாய் சகோதரரே! இங்கு வா; எனக்கோ பிறருக்கோ தீங்கு செய்ய வேண்டாம்," எனக்கூறினார் புனிதர் பிரான்சிஸ்.

உடனே அந்த ஓநாய் ஓட்டத்தை நிறுத்திவிட்டு, அகலத் திறந்த வாயை மூடிக்கொண்டு, மெல்ல நடந்து வந்து, சாதுவான ஓர் ஆட்டுக் குட்டியைப்போல் புனிதர் பிரான்சிஸின் காலடியில் படுத்துக் கொண்டது.

ஒரு மனிதர் மற்றொரு மனிதரிடம் பேசுவதுபோல், புனிதர் பிரான்சிஸ் அந்த ஓநாயிடம் பேசினார்.

"ஓநாய் சகோதரரே! இவ்வட்டாரத்து மக்களுக்கு நீ அதிக அளவு தீங்கு செய்து விட்டாய். இறைவன் படைத்த உயிர்களை இரக்கமின்றி அழித்துவிட்டாய்; மிருகங்களை மட்டும் அல்லாமல், மனிதர்களையும் நீ கொன்று தின்றுவிட்டாய். நீ செய்துள்ள தீமைகளுக்கு, திருடர்களையும் கொலைகாரர்களையும் தூக்கிலிடுவதுபோல் உன்னையும் தூக்கிலிடுவதுதான் தகும்.

****மன்னிப்பு***

மக்கள் யாவரும் உன்னைக் கண்டு அஞ்சுகிறார்கள். எல்லாரும் உன்னை வெறுக்கிறார்கள்; எல்லாரும் உன் பகைவர்கள்.

ஓநாய் சகோதரரே! உனக்கும் மக்களுக்குமிடையே நான் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புகிறேன். இனிமேல் நீ அவர்களுக்குத் தீங்கு செய்யக்கூடாது; கடந்த காலத்தில் நீ செய்துள்ள தீமைகளை எல்லாம் அவர்கள் மன்னித்து விடுவார்கள்."

புனிதர் பிரான்சிஸ் இவ்வாறு கூறியதும் அந்த ஓநாய் | தன் வாலை ஆட்டி, தலையை அசைத்து, புனிதர் பிரான்சிஸ் | கூறியதை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தது.

பிறகு புனிதர் பிரான்சிஸ் தொடர்ந்து கூறினார்:

"ஓநாய் சகோதரரே! நீ சமாதானம் செய்துகொள்ள விரும்புவதால், நீ உயிர் வாழும்வரை இவ்வட்டாரத்து மக்கள் உனக்கு உணவளிப்பார்கள் என நான் உனக்கு உறுதிமொழி கூறுகிறேன். இனிமேலும் பசியினால் நீ துன்பப்பட வேண்டியதில்லை. பசியினால்தான் நீ இந்தத் தீமைகளைச் செய்தாய் என்பதை நான் அறிவேன்.

பதிலுக்கு நீ எனக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும். அதாவது, மனிதர்களுக்கோ, மிருகங்களுக்கோ ஒருபோதும் தீங்கு செய்வதில்லை என நீ எனக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும்.

****மன்னிப்பு***

*நீ எனக்கு இந்த உறுதிமொழியை அளிப்பாயா?"*

*அந்த ஓநாய் தலையசைத்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தது.*

*"ஓநாய் சகோதரரே நீ அளித்த உறுதிமொழியை நம்பலாம் என நீ எனக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்," எனக்கூறி, புனிதர் பிரான்சிஸ் தம் கையை நீட்டினார்.*

*அந்த ஓநாய், தன் வலது பாதத்தை உயர்த்தி, புனிதர் பிரான்சிஸ் கையில் வைத்து உத்தரவாதம் தந்தது.*

*பிறகு புனிதர் பிரான்சிஸ் கூறினார்:*

*"ஓநாய் சகோதரரே, பயப்படாமல், சந்தேகப்படாமல் என்னுடன் வா; பட்டணத்திற்குச் சென்று நாம் செய்துகொண்ட இந்தச் சமாதான ஒப்பந்தத்தை மக்களிடம் உறுதிப்படுத்துவோம்."*

*புனிதர் பிரான்சிஸ் பட்டணத்திற்குத் திரும்பி வந்தார். அந்த ஓநாய் ஒரு சாதுவான ஆடுபோல் அவர் பக்கத்தில் நடந்து வந்தது.*

*இந்த அதிசயச் செய்தி பட்டணத்தில் விரைவாகப் பரவியது. இந்த அதிசயத்தைக் காண, பட்டணத்து மக்கள் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் பெரியோர்களும் அனைவரும் கூடிவிட்டார்கள். அவர்களிடம் புனிதர் பிரான்சிஸ் கூறினார்:*

****மன்னிப்பு***

"என் சகோதரர்களே, கவனமாகக் கேளுங்கள்; உங்கள் முன் நிற்கும் இந்த ஓநாய் சகோதரர், உங்களுடன் சமாதானம் செய்து கொள்வதாகவும் இனிமேல் ஒருபோதும் உங்களுக்குத் தீங்கு செய்வதில்லை என்றும் என்னிடம் உறுதி மொழி அளித்துள்ளார்; பதிலுக்கு நீங்கள் அதற்கு அன்றாடம் உணவு அளிப்பதாக எனக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும்."

அங்குக் கூடியிருந்த மக்கள், அந்த ஓநாய் தங்களுக்குச் செய்த தீங்குகளை மன்னித்துவிடுவதாகவும் அந்த ஓநாய் உயிர் வாழும்வரை, அதற்கு உணவு அளிப்பபதாகவும் உறுதிமொழி வழங்கினார்கள்.

பட்டணத்து மக்கள் ஓநாயை மன்னித்து, அதற்கு உணவு அளிப்பதாக உறுதிமொழி வழங்கியதும் புனிதர் பிரான்சிஸ் ஓநாயிடம் கூறினார்:

"ஓநாய் சகோதரரே, இனிமேல் ஒருபோதும் மனிதர்களுக்கோ, மிருகங்களுக்கோ தீங்கு செய்யமாட்டேன் என்று நீ அளித்த உறுதிமொழியைக் காப்பற்றுவாயா?"

அந்த ஓநாய் தலையசைத்து, தான் அளித்த உறுதிமொழியைக் காப்பாற்றுவதாகத் தெரிவித்தது.

புனிதர் பிரான்சிஸ் தொடர்ந்து கூறினார்:

*****மன்னிப்பு****

*"ஓநாய் சகோதரரே, பட்டணத்திற்கு வெளியே நீ எனக்கு உத்தரவாதம் தந்தாய். இப்போது, பட்டணத்து மக்கள் எல்லாருக்கும் முன் உத்தரவாதம் அளி."*

*அந்த ஓநாய், தன் வலது பாதத்தை உயர்த்தி, புனிதர் பிரான்சிஸ் கையில் வைத்தது. இந்த அதிசயத்தைப் பார்த்த மக்கள் ஆனந்தத்தால் இறைவனைப் போற்றினார்கள்.*

*இதன்பிறகு, அந்த ஓநாய் குப்பியோ பட்டணத்தில் வாழ்ந்து வந்தது. எவரொருவருக்கும் தீங்கு செய்யாமல், அந்தப் பட்டணத்து வீடுகளுக்கெல்லாம் அது சென்றது. ஒரு விருந்தினரை வரவேற்பதுபோல் மக்கள் யாவரும் அதை உபசரித்து உணவு அளித்தார்கள். அங்குள்ள எந்த நாயும் இந்த ஓநாயைக் கண்டு குரைக்கவில்லை. ஈராண்டுகளுக்குப் பின், அது முதுமையடைந்து இறந்து விட்டது. அது இறந்தபோது, பட்டணத்து மக்கள் எல்லாரும் அதற்காகத் துக்கம் அனுசரித்தார்கள்.*

.....................................................................

## 6. *தீயான குரு ஹக்குயின்*

*ஹக்குயின்* (Hakuin) *பதினாறாம் நூற்றாண்டில் ஜப்பானில் வாழ்ந்தார். இவர் புத்தர் பெருமானின் உபதேசங்களைக் கற்றுத் துறவு பூண்டு, பற்றுகளை அறுத்து, "நான்," என்ற அகந்தையை அழித்து, பேதமையிலிருந்து*

விடுபட்டு மெய்ஞ்ஞானம் பெற்றவர். இவரைப் பற்றிய பல கதைகள் உண்டு. அவற்றில் ஒரு கதை இது.

இச்சம்பவம் நடந்தபோது, ஹக்குயின் ஒரு கிராமத்தின் எல்லைப் பகுதியில் இருந்த ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார். இவருடைய பக்தியையும் எளிய தூய்மையான வாழ்க்கையையும் பார்த்த கிராம மக்கள் அவரிடம் பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்கள். அவருக்கு உணவு கொண்டு வந்து கொடுத்து, அவருடைய உபதேசங்களைக் கேட்டு வந்தனர் கிராம மக்கள்.

ஹக்குயின் குடிசைக்கு அருகில் ஒரு கடைக்காரர் குடியிருந்தார். அவருக்கு ஒர் அழகிய மகள் இருந்தாள். இவள் அந்தக் கிராமத்து இளைஞன் ஒருவனுடன் நட்பு கொண்டு, தவறான நடத்தையினால் கருவுற்றாள். திருமணமாகாத தம் மகள் கருவுற்றிருப்பதை அறிந்த பெற்றோர் சினமடைந்தனர். குடும்பத்திற்குப் பெரும் அவமானத்தைக் கொண்டு வந்துவிட்டதாக அவளைத் திட்டி, குழந்தையின் தந்தை எவரெனக் கூறும்படி கேட்டனர்.

ஆனாலும் அவள் அந்த இளைஞனைக் காட்டிக் கொடுக்கவில்லை. பெற்றோர் அவளை கடுமையாகத் திட்டி அடித்து வற்புறுத்திக் கேட்டபோது, ஹக்குயின் எனக் கூறிவிட்டாள்.

கிராம மக்கள் எல்லாரும் "புனிதர்" எனப் போற்றப்படும் ஹக்குயினா குழந்தையின் தந்தை! அவரா

****மன்னிப்பு***

இப்படி இழிவாக நடந்து கொண்டார்," என எண்ணிச் சினமடைந்த பெற்றோர், ஹக்குயினிடம் சென்று, கடுஞ்சொற்களால் அவரைத் திட்டினார்கள்.

வேடதாரி என்றும் அயோக்கியன், நயவஞ்சகன், மனிதர்களிலேயே மிகவும் இழிவானவன் என்றும் நாய், கழுதை என்றும் அவரைத் திட்டினார்கள். கடுஞ்சொற்களால் திட்டிய பெற்றோரிடம் "அப்படியா," என்று மட்டும்தான் ஹக்குயின் கூறினார். வேறொன்றும் கூறவில்லை.

"திருமணமாகாத ஒரு பெண் கருவுற்றிருக்கிறாள்; குழந்தையின் தந்தை ஹக்குயின் என அவள் கூறுகிறாள்," என்ற செய்தி கிராமத்தில் விரைவாகப் பரவியது. மக்களிடையே தமக்கிருந்த நற்பெயரையும் புகழையும் ஹக்குயின் இழந்தார். முன்பு அவருடைய பக்தியையும் தூய்மையான வாழ்வையும் புகழ்ந்த மக்கள், இப்போது அவருடைய பக்தியையும் துறவையும் கேலி செய்து பரிகசித்துத் தூற்றினார்கள்.

முன்பெல்லாம் கிராம மக்கள் கூட்டமாக அவருடைய குடிசைக்குச் சென்று, அவருடைய போதனையைக் கேட்டு வந்தார்கள். இப்போது எவரும் அங்குப் போவதில்லை. அவருக்கு உணவு கொண்டு வந்து கொடுப்பதையும் நிறுத்திவிட்டார்கள். கிராமத்து வீதியில் அவரைச் சந்திக்க நேர்ந்தால் கடும் வார்த்தைகளால் திட்டி, பழித்துப் பேசிச் சென்றார்கள். அவர் யாசிக்கச் சென்றபோது, கதவை மூடித் தாளிட்டுக் கொண்டார்கள். ஒரு சிலர்

****மன்னிப்பு***
பரிதாபப்பட்டுக் கொடுப்பதை ஏற்றுக் கொண்டு குடிசைக்குத் திரும்பிச் செல்வார் ஹக்குயின்.

ஆனாலும் ஹக்குயின் எவரையும் குறை பேசாமல், எவர் மீதும் பழி சுமத்தாமல், மக்களின் நிந்தை மொழிகளைப் பொறுமையோடு பொறுத்துக் கொண்டார்.

அந்தப் பெண் பிரசவித்ததும் அவள் பெற்றோர், அந்தக் குழந்தையை ஹக்குயினிடம் கொண்டு வந்து, “இது உன் குழந்தை, இதை நீ கவனித்துக் கொள்," எனக்கூறிக் குழந்தையை அங்கு விட்டுச் சென்றார்கள்.

"அப்படியா," எனக்கூறிய ஹக்குயின் அந்தக் குழந்தையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டார். அவர் வேறொன்றும் கூறவில்லை.

ஹக்குயின் அந்தக் குழந்தையை மிகவும் அன்புடன் கவனித்துக் கொண்டார். குழந்தையின் உண்மையான பெற்றோர்கூட அவ்வாறு அக்குழந்தையைக் கவனித்திருக்க முடியாது.

குழந்தைக்குத் தேவையானவற்றை எல்லாம் ஹக்குயின் அந்தக் கிராம மக்களிடம் யாசித்துப் பெற்றார். அந்தப் பச்சிளங் குழந்தைக்காகப் பரிதாபப்பட்டு மக்கள் கொடுத்தார்கள். ஆனாலும் மக்களிடையே தமக்கிருந்த நன்மதிப்பை அறவே இழந்துவிட்டார் ஹக்குயின்.

*****மன்னிப்பு****

*சில சமயங்களில் ஹக்குயின் குழந்தையைக் குடிசையினுள் விட்டுவிட்டு அண்டை வீட்டாரிடம் யாசிக்கச் செல்வார். சிலசமயம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு யாசிக்கச் செல்வார். இவை யாவற்றையும் அந்தக் குழந்தையைப் பெற்ற தாய் தன் வீட்டிலிருந்து கவனிப்பாள்.*

*ஓர் ஆண்டு சென்றது. ஒரு நாள் ஹக்குயின், அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அண்டை வீட்டாரிடம் சென்று யாசித்தார். அப்போது மழை பெய்யத் தொடங்கியது. அவர் குழந்தையைத் தன் மார்போடு அணைத்துப் பிடித்துக் கொண்டு தம் குடிசைக்குத் திரும்பிச் சென்றார்.*

*தன் வீட்டிலிருந்து சாளரத்தின் வழியாக இதைப் பார்த்தாள் குழந்தையின் தாய். இதற்கு மேலும் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. குற்ற உணர்வு உள்ளத்தை வருத்த, தாய்ப்பாசம் மேலிட, பெற்றோரிடம் உண்மையைக் கூறினாள்.*

*குழந்தையின் தந்தை ஹக்குயின் அல்லவென்றும் அந்தக் கிராமச் சந்தையில் வேலை செய்யும் ஓர் இளைஞன்தான் குழந்தையின் தந்தை என்றும் கூறித் தேம்பித் தேம்பி அழுதாள். அதிர்ச்சியடைந்த பெற்றோருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.*

*பெற்றோர் இருவரும் ஹக்குயினின் குடிசைக்கு ஓடினார்கள். அவருடைய பாதத்தில் விழுந்து, உண்மையைக் கூறி, தங்களை மன்னித்துவிடும்படி அவரிடம்*

****மன்னிப்பு***

வேண்டிக் கொண்டபின், குழந்தையைத் தங்களிடம் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

"அப்படியா," எனக் கூறிய ஹக்குயின் குழந்தையைத் திரும்ப அவர்களிடம் ஒப்படைத்தார். அவர் வேறு எதுவும் பேசவில்லை.

குழந்தையின் தந்தை ஹக்குயின் அல்ல; கிராமத்துச் சந்தையில் வேலை செய்யும் ஓர் இளைஞன்தான் என்ற செய்தி கிராமத்தில் விரைவாகப் பரவியது.

கிராம மக்கள் யாவரும் ஹக்குயினின் குடிசைக்கு வந்து, அவர் பாத்த்தில் விழுந்து, தங்களை மன்னித்துவிடும்படி வேண்டினார்கள்.

"அப்படியா," எனக்கூறிய ஹக்குயின் அக்கணமே அனைவரையும் மன்னித்துவிட்டார்.

அதன் பிறகு, முன்பு போலவே தமக்கிருந்த மதிப்பையும் மரியாதையையும் செல்வாக்கையும் மறுபடியும் பெற்றார் ஹக்குயின்.

முன்பு போலவே கிராம மக்கள் அவருக்கு உணவு கொண்டு வந்து கொடுத்து, அவர் வழங்கிய தர்ம உபதேசங்களைக் கேட்டு நன்மையடைந்தனர்.

........................................................................

****மன்னிப்பு****

*திருமணமாகாத பெண் கருவுற்றிருக்கிறாள். தண்டனைக்கு அஞ்சிய அவள், குழந்தையின் தந்தை ஹக்குயின் எனக் கூறிவிட்டாள். இதைக் கேட்டு சினமடைந்த பெற்றோர் ஹக்குயினின் குடிசைக்கு ஓடி வருகிறார்கள். ஆத்திரத்தில் எப்படியெல்லாம் அவர்கள் ஹக்குயினைத் திட்டியிருப்பாகள் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்.*

*குற்றமற்ற தம்மீது அபாண்டமான பழியைச் சுமத்திக் கடுஞ்சொற்களால் திட்டிய அந்தப் பெற்றோரிடம் ஹக்குயின் சினத்தையோ, வெறுப்பையோ காட்டவில்லை; அவர்களுடைய நிந்தை மொழிகளை பொறுமையுடன் பொறுத்துக் கொண்டார்.*

*கிராம மக்களும் நிந்தனை செய்தபோது, ஹக்குயின் எவரையும் குறை கூறாமல், எவர் மீதும் பழி சுமத்தாமல், எவரிடமும் சினமும் பகையும் கொள்ளாமல், மக்களின் நிந்தை மொழிகளைப் பொறுத்துக் கொண்டார். அதுமட்டுமல்ல; ஓராண்டுக் காலம் அந்தக் குழந்தையையும் அன்புடன் கவனித்துக் கொண்டார்.*

*உண்மை வெளியானதும் அந்தப் பெற்றோரும் கிராம மக்களும் வருந்தி மன்னிப்புக் கேட்டபோது, அக்கணமே ஹக்குயின் அனைவரையும் மன்னித்து, மறுபடியும் கிராமத்தில் சமாதானத்தை நிலைநாட்டினார்.*

****மன்னிப்பு***

*இவ்வுலகில் எக்காலத்தும் பகைமை*
*பகைமையால் தணிவதில்லை; பகைமை*
*அன்பினாலேயே தணியும். இதுவே பண்டை*
*அறநெறி.*

(*பகவான் புத்தர்*)

*என்னை நிந்தித்தான், என்னை அடித்தான்,*
*என்னை வென்றான், என்னை ஏமாற்றினான்.*
*என்னைக் கொள்ளையிட்டான், என்னைத்*
*துன்புறுத்தினான், - இத்தகைய எண்ணங்கள்*
*இல்லாதாரிடம் உள்ளத்தில் துவேசம் நில்லாது*
*நீங்கும்.*

*என்னை நிந்தித்தான், என்னை அடித்தான்,*
*என்னை வென்றான், என்னை ஏமாற்றினான்,*
*என்னைக் கொள்ளையிட்டான், என்னைத்*
*துன்புறுத்தினான், - இத்தகைய எண்ணங்கள்*
*உடையவரிடம் உள்ளத்தில் துவேசம் நீங்காது*
*நிலைத்திருக்கும்.*

(*பகவான் புத்தர்*)

*****மன்னிப்பு****

### *7. கல்லால் அடிக்கப்பட்ட பெண்*

*(இது மொரோக்கோ நாட்டில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம்.)*

*முன்னொரு சமயம் ஒரு பட்டணத்தில் இரு சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். ஒருவர் பணக்காரர்; அந்தப் பட்டணத்து நீதிபதி; பொருளும் பதவியும் செல்வாக்கும் அதிகாரமும் பெற்றவர். மற்றவர் ஏழ்மையானவர்; இங்கும் அங்கும் கூலிக்கு வேலை செய்து கிடைத்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வந்தார். இவரிடம் பொருள் இல்லாத போதிலும் பக்தி நிறைய இருந்தது.*

*இந்த ஏழைச் சகோதரருக்கு ஒரு மனைவி இருந்தாள். அவள் அழகானவள். இவளும் தன் கணவரைப்போல் பக்தியுள்ளவள். இனிய சுபாவம் படைத்தவள். கணவரின் சொற்ப ஊதியத்தில் ஒரு பாகத்தை அநாதைகளுக்கும் யாசித்து வருவோருக்கும் கொடுத்து வந்தாள்.*

*இந்த ஏழைச் சகோதரர், தன் மனைவியின் சம்மதத்துடன் யாத்திரைக்குப் புறப்பட்டார். போகுமுன் தன் பணக்காரச் சகோதரரிடம் சென்று, "நான் யாத்திரைக்குப் போகிறேன். என் மனைவிக்குப் பாதுகாப்பு அளித்து, அவளைக் கவனித்துக் கொள்வீர்களா?" எனக் கேட்டார்.*

*****மன்னிப்பு****

"*நிச்சயமாக,*" *என நீதிபதி தன் சகோதரரிடம் கூறினார்.*

*அந்த ஏழைச் சகோதரர், தன் மனைவியிடம் நீதிபதி அவளுக்குப் பாதுகாப்பு அளித்து, அவளைக் கவனித்துக் கொள்வார் எனக் கூறிவிட்டு யாத்திரைக்குச் சென்றார்."*

*இந்த நீதிபதி தன் ஏழைச் சகோதரரின் மனைவியை இரகசியமாக விரும்பினார். "இப்போது எனக்கு வாய்ப்புக் கிடைத்துவிட்டது," என எண்ணிய நீதிபதி, தன் சகோதரரின் மனைவியை அடைய முயற்சி செய்தார்.*

*முதலில் பழங்களும் இனிப்புத் தின்பண்டங்களையும் அவளுக்கு அனுப்பி வைத்தார். அதை அவள் முறையாகப் பெற்றுக் கொண்டாள். அடுத்து அன்றாடம் அவள் வீட்டிற்குப் பூக்கள் வந்தன. அந்த மனைவி கவலையுறத் தொடங்கினாள். அடுத்து நீதிபதி அவளுக்கு நகைகள் அனுப்பி வைத்தார். இவற்றை அவள் ஏற்க மறுத்துத் திருப்பி அனுப்பிவிட்டாள்.*

*ஓர் இரவு, விலையுயர்ந்த சில ஆடைகளை எடுத்துக் கொண்டு, இரகசியமாக அவள் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினார் நீதிபதி. தனியாக இருந்த அவள், கதவைத் தட்டுவது யார் என்று ஒரு துவாரத்தின் வழியாகப் பார்த்தபோது, வெளியே நீதிபதி கையில் ஆடைகளுடன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டாள். தன் மைத்துனரின் தவறான நோக்கத்தை யூகித்துக் கொண்ட அவள், கதவைத் திறக்கவில்லை.*

****மன்னிப்பு***

ஒரு வாரம் கழித்து, இரவு நேரத்தில், நீதிபதி திரும்பவும் வந்தார். இப்போது ஆடைகளையும் அதோடுகூட சில நகைகளையும் எடுத்துக் கொண்டு வந்து, கதவைத் தட்டினார்.

"இதற்கு ஒரு முடிவு கட்டுவோம்," எனத் தனக்குள் கூறிக் கொண்ட அவள், கதவைத் திறந்து, "ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? நான் தங்கள் சகோதரரின் மனைவி. நான் கூச்சல் போட்டு அண்டை வீட்டாரை அழைப்பதற்கு முன் சென்றுவிடுங்கள்," எனக்கூறி படாரென்று ஓசையுடன் கதவை மூடிக் கொண்டாள்.

அண்டை வீட்டாருக்குத் தெரிந்துவிடுமோ என அஞ்சிய நீதிபதி, வேகமாக அங்கிருந்து சென்றார். போகும்போது, "இதற்காக நீ வருந்துவாய்," என ஆத்திரத்தில் முணுமுணுத்துக் கொண்டு சென்றார்.

தன்னை உதாசீனம் செய்து, அவமானப் படுத்திவிட்டதாக எண்ணிச் சினமடைந்த நீதிபதி, "கணவன் யாத்திரைக்குச் சென்றதும் மற்ற ஆடவர்களுடன் தவறாக நடந்து கொள்கிறாள்," என்ற பொய்யான வதந்தியைக் கிளப்பி விட்டார்.

அதோடு நிறுத்தவில்லை. வெளியூர்களிலிருந்து வந்த சில பயணிகளுக்குப் பணம் கொடுத்து, அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டி, குடிப்பதற்குத் தண்ணீர் கேட்பது போலவும் யாத்திரைக்குச் சென்ற அவள்

****மன்னிப்பு***

கணவரிடமிருந்து செய்தி கொண்டு வந்திருப்பது போலவம் பட்டணத்தில் வழி தெரியாதவர்கள் போலவும் நடிக்க ஏற்பாடு. செய்தார்.

அதன் காரணமாக, அவள் வீட்டிற்குக் காலையிலும் மாலையிலும் அறிமுகமில்லாத ஆடவர்கள் வந்து கதவைத் தட்டினார்கள். அறிமுகமில்லாத ஆடவர்கள் வந்து போவதைக் கவனித்த அண்டை வீட்டினர், அவள் ஒழுக்கங் கெட்டவள் எனக் காதோடு காதாகப் பேசிக் கொண்டார்கள்.

இப்போது நீதிபதி அந்தப் பெண்ணின்மீது வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார். “புனித யாத்திரைக்குச் சென்றுள்ள கணவனுக்கு இவள் துரோகம் செய்கிறாள். இவள் ஒழுக்கங் கெட்டவள். இவளுடைய ஒழுக்கக் கேட்டிற்கு ஏற்ப இவளைத் தண்டியுங்கள். பட்டணத்திற்கு வெளியே இவளைக் கொண்டு சென்று கல்லால் அடியுங்கள்," என ஆவேசத்துடன் பேசி, பட்டணத்து மக்களைத் தூண்டிவிட்டார்.

கோபமடைந்த மக்கள், அந்தப் பெண்ணின் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி, பட்டணத்திற்கு வெளியே இழுத்துச் சென்று, அவள்மீது கற்களை எறிந்தார்கள். இவர்கள் எறிந்த கற்கள் ஒரு சிறு மலைபோல் குவிந்துவிட்டன. அந்தக் கற்குவியலுக்கு அடியில் அவள் புதையுண்டு கிடந்தாள். அவள் இறந்துவிட்டதாக எண்ணிக் கொண்டு அனைவரும் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

*****மன்னிப்பு****

*மறுநாள் அவ்வழியே சென்ற ஒரு பயணி, அந்த இடத்தைக் கடந்து செல்லும்போது, கற்குவியலுக்குள்ளிருந்து வேதனையால் முணகும் குரலைக் கேட்டார். அவர் கற்களை நகர்த்தியபோது, அடியில் ஒரு பெண் குற்றுயிராய்க் கிடப்பதைக் கண்டார். வெளியூரிலிருந்து வந்திருந்த அந்தப் பயணி, அந்தப் பெண்ணின்மீது இரக்கப்பட்டு அவளைத் தன் ஊருக்குத் தூக்கிச் சென்று, தன் மனைவியிடம் ஒப்படைத்தார்.*

*உடல் முழுதும் காயப்பட்டிருந்த அவளை, அன்புள்ளம் கொண்ட கணவன் மனைவி இருவரும் கவனித்துக் கொண்டனர். அவள் குணமடைந்ததும் தங்களுடன் தங்கும்படி அவளைக் கேட்டுக் கொண்டார்கள். அவளும் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அவர்களுடன் தங்கினாள்.*

*மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்த இவள், முழுமையாகக் குணமடைந்ததும் நோயாளிகளைக் குணப்படுத்தும் அபூர்வ சக்தியைப் பெற்றாள். முதலில் அண்டை வீட்டுக்காரரின் காய்ச்சலைக் குணப்படுத்தினாள்; அடுத்து மற்றும் ஒருவரின் காலில் இருந்த ஆறாத புண்ணைக் குணப்படுத்தினாள். இந்தச் செய்தி விரைவாக அந்த ஊரில் பரவி, எல்லா வகை நோயாளிகளும் அவளிடம் வந்து குணமடைந்து சென்றார்கள். வெளியூர்களிலிருந்தும் நோயாளிகள் வந்து, தீராத நோய்களையும் குணப்படுத்திக் கொண்டு சென்றார்கள்.*

****மன்னிப்பு***

இவள்மீது பொய்க்குற்றம் சுமத்தித் தண்டித்த நீதிபதி, இப்போது கடுமையான நோயினால் பாதிக்கப் பட்டார். உடல் முழுதும் கொப்புளங்கள் தோன்றி, வெடித்து, இரத்தமும் சீழும் வடிந்தன. எந்த மருத்துவராலும் அவரைக் குணப்படுத்த முடியவில்லை. நாளுக்கு நாள் வேதனை அதிகரித்துக் கொண்டு வந்தது.

யாத்திரைக்குச் சென்றிருந்த கணவர் இப்போது திரும்பி வந்தார். வீட்டில் மனைவி இல்லாததைக் கண்டு. தன் சகோதரனிடம் விரைந்து சென்று, "எங்கே என் மனைவி?" எனக் கேட்டார்.

"விபச்சாரம் செய்ததால் கல்லால் அடிக்கப்பட்டு இறந்துவிட்டாள்," என நீதிபதி கூறினார்.

"நான் உங்களை நம்ப மாட்டேன். என் மனைவி ஒருபோதும் அப்படி நடந்துகொள்ள மாட்டாள்," என அந்தக் கணவர் கூறினார். ஆனால் அண்டை வீட்டாரும் அது உண்மை எனக் கூறியதும் மனமுடைந்து போன கணவர் அதை ஏற்றுக் கொண்டார்.

தன் சகோதரனின் கடுமையான நோயைப் பார்த்த அந்தக் கணவர், "சகோதரரே, என்ன நடந்தது? ஏன் தங்கள் உடல் முழுதும் புண்ணாக இருக்கிறது?" எனக் கேட்டார்.

தான் பார்க்காத மருத்துவர் இல்லை என்றும் எவராலும் தன்னைக் குணப்படுத்த முடியவில்லையென்றும்

****மன்னிப்பு***

நாளுக்குநாள் வேதனை அதிகரித்து வருகிறது என்றும் நீதிபதி கூறினார்.

'என்னுடைய யாத்திரையின்போது, எல்லா நோய்களையும் குணமாக்குபவர் ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். உங்களை அவரிடம் நான் அழைத்துச் செல்கிறேன்," என்றார் அந்தக் கணவர். நீதிபதி சம்மதித்தார். நீதிபதியை ஒரு தூக்குப் படுக்கையில் படுக்க வைத்து, தூக்கிக் கொண்டு புறப்பட்டார்கள்.

நீண்ட பயணத்திற்குப்பின், நோய்களைக் குணப்படுத்தும் அந்தப் பெண்ணின் வீட்டைச் சென்றடைந்தார்கள். அந்த இருவரும் தன் கணவரும் அவர் சகோதரரும்தான் என்பதை அவள் தெரிந்து கொண்டாள். அவள் ஒரு திரைக்குப் பின்னால் அமர்ந்திருந்ததால் இவர்களுக்கு அவள் யார் என்பது தெரியவில்லை.

தன் குரலை மாற்றிக் கொண்டு, "உங்கள் நோயைப் பற்றி என்னிடம் கூறுங்கள்," என்றாள் அவள்.

தான் மேற்கொண்ட மருத்துவங்களையும் தன் வேதனையையும் விளக்கிக் கூறினார் நீதிபதி.

"இந்த நோய்க்குக் காரணம் நீங்கள் செய்துள்ள பாவம்தான். உங்கள் பாவத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேளுங்கள். இல்லாவிடில் உங்களைக் குணப்படுத்த முடியாது," என அவள் கூறினாள்.

*****மன்னிப்பு****

*"நான் ஒரு நீதிபதி. நான் பாவம் எதுவும் செய்யவில்லை," என அந்த நோயாளி கூறினார்.*

*"உங்கள் பாவத்தை ஒப்புக் கொண்டு, மன்னிப்புக் கேளுங்கள். இல்லாவிடில் உங்களைக் குணப்படுத்த முடியாது," என்று திரைக்குப் பின் அமர்ந்திருந்த அவள் மறுபடியும் கூறினாள்.*

*"சகோதரரே, உங்கள் பாவத்தை ஒப்புக் கொள்ளுங்கள். இல்லாவிடில் இந்தப் பயங்கர நோயினால் இறந்துவிடுவீர்கள்," என அந்தச் சகோதரர் நீதிபதியிடம் கெஞ்சினார்.*

*ஆழ்ந்த வருத்தத்தால் அழுத நீதிபதி, தன் சகோதரனிடம் கூறினார்:*

*"உன் மனைவி விபச்சாரம் செய்தாள் என்று நான்தான் அவள்மீது பொய்க்குற்றம் சுமத்தினேன். நான்தான் அவளைக் கல்லால் அடித்துக் கொல்லுங்கள் எனப் பட்டணத்து மக்களை ஏவினேன். நான் பெரும் பாவத்தைச் செய்துவிட்டேன். என்னை நம்பி, உன் மனைவியை என் பாதுகாப்பில் விட்டு நீ யாத்திரைக்குச் சென்றாய். நான் உனக்குத் துரோகம் செய்துவிட்டேன். அதன் பயனை இப்போது நான் அனுபவிக்கிறேன். சகோதரரே என்னை மன்னித்துவிடு," எனக்கூறி, தன் சகோதரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, கண்ணீர் சிந்தி அழுதார் நீதிபதி.*

****மன்னிப்பு***

நீதிபதி இவ்வாறு கூறியதும் திரைக்குப் பின்னால் இருந்த அவள், திரையை விலக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

தன் மனைவி உயிருடன் இருப்பதைப் பார்த்த கணவன் பெரும் மகிழ்ச்சியடைந்தான். தன் கணவரிடம் அவள் கூறினாள்:

"உங்கள் விருப்பம் அதுவென்றால், உங்கள் சகோதரரை நான் குணப்படுத்துகிறேன்."

"என் சகோதரர் துன்பப் படுகிறார். தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு, அதற்காகக் கண்ணீர் சிந்தி வருந்துகிறார். அவரை நான் மன்னிக்கிறேன். அவரை குணப்படுத்திவிடு," எனக் கணவர் கூறினார்.

அந்த மனைவி நீதிபதியைக் குணப்படுத்தினாள். குணமடைந்த நீதிபதி, "உன்மீது பொய்க்குற்றம் சுமத்தி, உனக்குப் பெரும் தீங்கிழைத்ததற்காக வருந்தி உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன். என்னை மன்னித்துவிடு," எனக்கூறி, அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

****மன்னிப்பு****

## 8. ஒரு பண்டிதரின் கதை

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், திபேத் நாட்டில் மிலரப்பா என்ற யோகி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் புத்தரின் தர்ம உபதேசங்களைக் கற்று, பல ஆண்டுகள் மலைகளிலும் குகைகளிலும் தவம் செய்து ஞான அறிவைப் பெற்றார். இவ்வுலக மக்களின் மீது கருணை கொண்டு, ஊர் ஊராகச் சென்று, பல ஆண்டுகள் திபேத்திய நாட்டு மக்களுக்குத் தர்ம உபதேசம் செய்தார். திபேத் நாடு முழுதும் அவர் புகழ் பரவியது. திபேத் நாட்டின் பல பகுதிகளிலிருந்து மக்கள் அவரைக் காண வந்தார்கள். அவருடைய போதனையைக் கேட்டுப் பலர் பயனடைந்தார்கள்.

தம்முடைய இறுதிக் காலத்தில், திபேத் நாட்டில் உள்ள பிரின் என்ற ஊருக்கு மிலரப்பா வந்தார். அந்த ஊரில் ஒரு பண்டிதர் வாழ்ந்து வந்தார். அவர் தர்ம சாஸ்திரங்களையும் தத்துவ சாஸ்திரங்களையும் கற்றவர்; பெரும் செல்வந்தர். தர்ம சாஸ்திரங்களைக் கற்ற பண்டிதர் என்பதாலும் பெரும் செல்வந்தர் என்பதாலும் அவ்வூரிலும் சுற்று வட்டாரத்திலும் இவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது.

தர்ம சாஸ்திரங்களைக் கற்றுப் பெற்ற நூலறிவைக் கொண்டு, தாம் யாவற்றையும் அறிந்துவிட்டதாக எண்ணி இறுமாப்புக் கொண்டிருந்தார் இந்தப் பண்டிதர். அதன் காரணமாகவும் தாம் பெருஞ் செல்வந்தர் என்பதனாலும்

****மன்னிப்பு***

*எல்லாரும் தம்மைப் பாராட்டிப் புகழ வேண்டும் என்றும் மதித்து மரியாதை செய்ய வேண்டுமென்றும் இவர் எதிர்பார்த்தார்.*

*இவர் தர்ம சாஸ்திரங்களைக் கற்ற பண்டிதர் என்றாலும் அதற்கேற்றபடி இவர் வாழவில்லை. தர்ம சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள தர்ம சீலங்களை இவர் கடைப்பிடிக்கவில்லை. தர்ம சீலங்களில் இவருக்கு நாட்டமில்லை. ஒழுக்கக் கேட்டில் சென்று வாழ்க்கை இன்பங்களை நாடுவதிலும் பொருள் தேடுவதிலும் இவருக்கு இருந்த நாட்டம் நன்னெறிப் பயிற்சிகளினால் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வதில் இல்லை. சபல வார்த்தைகளினாலும் கபடத்தாலும் வஞ்சனையாலும் தம் ஒழுக்கக் கேட்டை மறைத்து, சாஸ்திரங்களைக் கற்றுள்ளதால் யாவற்றையும் அறிந்து தெளிந்தவர்போல் நடந்து கொண்டார்.*

*அவ்வூரிலும் சுற்று வட்டாரங்களில் உள்ள ஊர்களிலும் சடங்கு சம்பிரதாயங்கள் செய்து, இவர் நிறையவே சம்பாதித்தார். "சாஸ்திரங்களைக் கற்ற பண்டிதர்," என மக்கள் இவரை மதித்து, தேடிவந்து, சடங்கு சம்பிரதாயங்களைச் செய்ய அழைத்தார்கள். இதில் இவருக்கு நிறைய வருமானம் கிடைத்தது. மேலும் அதிக வட்டிக்குப் பணம் கொடுத்தும் பொருளீட்டினார்.*

*இவ்வாறெல்லாம் பொருளீட்டிச் சுகபோக வாழ்வு வாழ்ந்து வந்தார் இப்பண்டிதர். இவர் திருமணம் செய்து*

கொள்ளவில்லை. ஆனால் இவருக்கு வைப்பாட்டிகள் இருந்தார்கள். நன்னெறியில் நாட்டமில்லாத இவர், "நாம் தர்ம சாஸ்திரங்களைக் கற்றுள்ளோம்," என்ற மமதையில், எல்லாரும் தம்மை மதித்து மரியாதை செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்தார்.

மிலரப்பா, பிரின் என்ற ஊருக்கு வந்ததில் அவ்வூர் மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சி. கையில் பிச்சைத் தட்டை ஏந்தி, வீடு வீடாகச் சென்று யாசித்து, மக்கள் கொடுத்ததை ஏற்று, அவ்வூரில் சில காலம் தங்கி, அவ்வூர் மக்களுக்குத் தர்ம போதனை செய்தார் மிலரப்பா.

கூட்டம் கூட்டமாக மக்கள் மிலரப்பாவைக் காணச் சென்றார்கள். அவரை வணங்கி, அவருடைய போதனையைக் கேட்டார்கள். அவருடைய ஏழ்மையையும் எளிமையான வாழ்வையும் கருணையையும் தவத்தையும் உபதேசத்தையும் பற்றி ஊரெல்லாம் சிறப்பித்துப் பேசினார்கள்.

இதையெல்லாம் பார்த்த பண்டிதருக்கு உள்ளம் பொறுக்கவில்லை.

கல்லாத ஒரு பரதேசியை இந்த மக்கள் வணங்கி மரியாதை செய்து புகழ்கிறார்களே! சாஸ்திரங்களைக் கல்லாத இந்த மடையனின் பிதற்றலை உண்மை என நம்புகிறார்களே! இவனோ, சாஸ்திரங்களைக் கற்றறியாத ஒரு மடையன். ஒரு வேளை சாப்பாட்டுக்கும்

வக்கில்லாதவன். தவத்தில் மாண்பு பெற்றவன்போல் வேடமிட்டு ஏமாற்றும் வஞ்சகன். இந்த மடையனின் பிதற்றலை உண்மை என நம்பி, மக்கள் அவனை வணங்கி மரியாதை செய்கிறார்களே!

நாமும்தான் இருக்கிறோம். சாஸ்திரங்களை முழுமையாகக் கற்றுள்ளோம். யாவற்றையும் அறிந்துள்ளோம். நம் பெருமை இவர்களுக்குத் தெரியவில்லையே! சாஸ்திரங்களைக் கற்று யாவற்றையும் அறிந்துள்ள நம்மையல்லவா இவர்கள் வணங்கி, மரியாதை செய்து புகழ வேண்டும்," என உள்ளம் பெருமினார் பண்டிதர்.

அச்சமயம் அவ்வூரில் ஒரு திருமண விருந்து நடைபெற்றது. இரு தரப்பு விட்டுக்காரர்களும் மிலரப்பாவை விருந்துக்கு அழைத்திருந்தனர். மிலரப்பா அழைப்பை ஏற்று விருந்துக்குச் சென்றார். திருமண வீட்டினர் அவரை வரவேற்று, முன் வரிசையில் ஆசனம் அளித்து, அமரச் செய்து கௌரவித்தார்கள்.

பண்டிதரும் விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்தார். அவர் வந்தவுடன் அவரையும் வரவேற்று, மிலரப்பாவிற்கு அருகில் ஆசனம் கொடுத்து, அமரச் செய்து கௌரவித்தார்கள்.

மிலரப்பாவைப் பண்டிதர் ஏளனமாகக் கருதிய போதிலும் எல்லாரையும்போல் தாமும் மிலரப்பாவிற்கு வணக்கம் தெரிவிப்பதுபோல் பாவனை செய்து, தலைவணங்கி

வணக்கம் தெரிவித்தார். பதிலுக்கு மிலரப்பா தலைவணங்கி வணக்கம் தெரிவிப்பார் என்றுதான் பண்டிதர் எதிர்பார்த்தார். ஆனால், மிலரப்பா அப்படிச் செய்யவில்லை.

பதிலுக்கு வணங்கி வணக்கம் தெரிவிக்கும் பழக்கம் மிலரப்பாவிற்கு இல்லை என்பதால், அவர் தம் பழக்கத்திலிருந்து விலகவில்லை. இதைக் கண்ட பண்டிதர் எரிச்சலடைந்தார்.

"என்ன! எவ்வளவு கற்ற பண்டிதனான நான் இந்த மூடனுக்குத் தலை வணங்குவதா! பதிலுக்குத் தலைவணங்கி வணக்கம் தெரிவிக்காமல், இவன் தன்னை உயர்த்திக் கொள்வதா! இவனுடைய பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தி, மக்களிடையே இவனுக்குள்ள மதிப்பைக் குறைப்போம்," என எண்ணி, ஒரு தத்துவ சாஸ்திர நூலை எடுத்து மிலரப்பாவிடம் கொடுத்து,

"தயவு செய்து இந்த நூலைப் படித்து, சொல்லுக்குச் சொல் பொருளை விளக்கி, எனக்கேற்பட்டுள்ள சில குழப்பங்களைப் போக்குங்கள்," எனக் கூறினார்.

மிலரப்பாவோ நூலறிவைக் கடந்தவர். ஞான அறிவைப் பெற்றவர். பல ஆண்டுகள் தியானம் செய்து, நூல்களில் கூறப்பட்டுள்ள சொற்களின் உட்பொருள் அறிந்தவர். நூல்களில் கூறப்பட்டுள்ளவை வெறும் வார்த்தைகள்தாம் என்பதைத் தம் ஞான அறிவினால் அறிந்து தெளிந்தவர். ஆகவே, மிலரப்பா இவ்வாறு பதில் கூறினார்:

"இவை வெறும் வார்த்தைகள்தாம். வார்த்தைக்கு வார்த்தை விளக்கம் தாங்களே கூற முடியும். அதற்கான திறமையும் தங்களுக்கு உண்டு. வார்த்தைக்கு வார்த்தை விளக்கம் கூறுவது வேறு; வார்த்தைகளின் உட்பொருள் அறிவது வேறு.

நூல்களில் கூறப்பட்டுள்ள வார்த்தைகளின் உட்பொருளை அறிவதற்கு நன்னெறிகளைக் கடைப்பிடித்து வரவேண்டும்; பற்றுகளை அறுக்க வேண்டும்; அவாவை அழிக்க வேண்டும்; "நான்," எனும் அகந்தையை ஒழிக்க வேண்டும்; பேதமையிலிருந்து விலக வேண்டும்.

நான் வெறும் நூலறிவிற்கு முக்கியத்துவம் கொடுத்ததுமில்லை; நூல்களைப் படித்துப் பெற்ற அறிவைக் கொண்டு குதர்க்கம் செய்வதுமில்லை. இதனால் மனம்தான் குழப்பமடையும். வெறும் நூலறிவினால் மெய்ப்பொருளை உணர முடியாது. தக்க பயிற்சிகளினால்தான் மெய்ப்பொருளை உணர முடியும்.

எனக்கு நூலறிவு அதிகம் இல்லை. அப்படியே நான் நூல்களைப் படித்திருந்தாலும் அவை வெறும் வார்த்தைகள்தாம் என்பதை உணர்ந்து கொண்டதால், அவற்றை மறந்து வெகு காலம் ஆகிவிட்டது."

இதைக் கேட்ட பண்டிதர், "இவை யாவும் யோகிகளின் கொள்கைகள். எம்மைப் போன்ற பண்டிதர்கள் இதை அறிவோம். உம்முடைய பேச்சிலிருந்து நீர் இன்னும்

உண்மையை உணரவில்லை என்பது தெளிவாகிறது. மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட்டவர் என எண்ணித்தான் யாம் தலை வணங்கி உமக்கு வணக்கம் தெரிவித்தோம்" எனக்கூறினார்.

இதைக் கேட்ட மக்கள் வெறுப்படைந்து, "பண்டிதரே! தாங்கள் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் தங்களைப் போன்ற பேராசிரியர்கள் இந்த உலகில் எத்தனை பேர் இருந்தாலும் நீங்கள் யாவரும் மிலரப்பாவின் உடலில் இருக்கும் ஒரு உரோமத்திற்கு இணையாகமாட்டீர்கள். முன் வரிசையில் ஆசனம் அளித்துத் தங்களைக் கௌரவப் படுத்தியதில் திருப்தி அடையுங்கள். அதிக வட்டிக்குப் பணம் கொடுத்து, எப்படியெல்லாம் சம்பாதிக்க முடியுமோ அவற்றைச் செய்யுங்கள். மதத்தைப் பொறுத்தவரை, அதன் மணம் சிறிதளவுகூட உம்மிடம் இல்லை," எனக்கூறித் தம் வெறுப்பைத் தெரிவித்தார்கள்.

இதைக்கேட்ட பண்டிதர் சினமடைந்தார். ஆனால், மக்கள் யாவரும் ஒருசேரத் தன்னை எதிர்க்கிறார்கள் என அறிந்ததும் ஒன்றும் பேசாமல் சிடுசிடுப்புடன் ஆசனத்தில் அமர்ந்து இவ்வாறு எண்ணலானார்:

இந்த மடையன் பொய்யாலும் பித்தலாட்டத்தாலும் மக்களை ஏமாற்றுகிறான். இதை அறியாத இந்த மக்கள், இவனுக்குத் தானம் பல கொடுத்து, இவனுக்கு மரியாதை செய்கிறார்களே! நாமும்தான் இருக்கிறோம்! எத்தனை நூல்களைப் படித்துள்ளோம்! யாவற்றையும் அறிந்துள்ளோம்!

****மன்னிப்பு***

மற்றும் இந்த ஊரிலேயே பெரும் செல்வந்தர்! செல்வாக்கு மிகுந்தவர்! இவ்வளவு பெருமைகளை உடைய நம்மை நாயிலும் கேவலமாகக் கருதுகிறார்களே! இதற்கு முடிவுகட்ட வேண்டும்," என உறுதி பூண்டார்.

சில நாள்கள் கழித்து, தம் வைப்பாட்டி ஒருத்தியிடம் கொஞ்சம் விஷம் கலந்த தயிரைக் கொடுத்து, அதைக் கொண்டு சென்று மிலரப்பாவிடம் கொடுக்கும்படி கூறினார். இக்காரியத்தைச் செய்தால் அவளுக்குத் தங்கம் தருவதாக உறுதிமொழி அளித்து; ஆசை மொழிகளைப் பேசி அவளைத் தூண்டினார். அவளும் அவ்வாறே செய்தாள்.

இதை எல்லாம் மிலரப்பா அறிவார். தம்முடைய உலக வாழ்வு முடிவுக்கு வந்துவிட்டது என்பதையும் மிலரப்பா அறிவார். அதாவது விஷத்தை உட்கொண்டாலும் உட்கொள்ளாவிட்டாலும் தம்முடைய இந்த உலக வாழ்வு ஒரு முடிவுக்கு வரப்போகிறது என்பதை மிலரப்பா அறிவார்.

தங்கம் கொடுப்பதாகப் பண்டிதர் உறுதிமொழி அளித்திருந்தாலும் அவளைப் பண்டிதர் ஏமாற்றிவிடுவார் என்பதையும் மிலரப்பா அறிவார். விஷத்தைத் தனக்குக் கொடுப்பதற்குமுன் அவள் தங்கத்தைப் பெறாவிட்டால், விஷத்தைக் கொடுத்தபின் அவளுக்குத் தங்கம் கிடைக்காது என்பதை முன்னதாகவே அறிந்து, விஷம் கலந்த தயிரைக் கொடுக்க வந்த அவளிடம் மிலரப்பா இவ்வாறு கூறினார்:

****மன்னிப்பு***

"தற்போதைக்கு நீ அளிக்கும் உணவை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். பிறகு கொண்டு வா; நான் ஏற்றுக் கொள்கிறேன், என்றார்.

"நம் தீய நோக்கத்தை மிலரப்பா அறிந்து கொண்டாரோ!" என அஞ்சிய அவள், திரும்பி வந்து பண்டிதரிடம் எல்லாவற்றையும் கூறி, "அவருக்குப் பிறர் எண்ணங்களை அறியும் ஆற்றல் உண்டு. அதனால்தான் என் தீய நோக்கத்தை அறிந்துகொண்டு நான் அளித்த உணவை ஏற்க மறுத்துவிட்டார்," என்றும் கூறினாள்.

ஆனால் பண்டிதரோ, அவளுக்குத் தைரியமூட்டும் பொருட்டு, "நீ கூறுவது போன்ற சக்தி மிலரப்பாவுக்கு இருக்கும் என்றால், உணவைப் பிறகு கொண்டுவா என உன்னிடம் கூறியிருக்கமாட்டார். உணவை உன்னிடம் திருப்பிக் கொடுத்து, உன்னையே உண்ணச் சொல்லியிருப்பார். இதிலிருந்தே அவருக்கு அப்படியொரு சக்தி இல்லை என்பது தெளிவாகிறது," எனக்கூறி, தங்கத்தை அவளிடம் கொடுத்து, மீண்டும் தயிரைக் கொண்டு சென்று மிலரப்பாவிடம் கொடுக்கச் சொன்னார்.

ஆனால் அவளோ, "மிலரப்பாவிற்கு இப்படியொரு சக்தி உண்டு என்று எல்லாரும் நம்புகிறார்கள். தயிரை அவர் ஏற்க மறுத்தது இதை மெய்ப்பிக்கிறது. மறுபடியும் தயிரை ஏற்க மறுப்பார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. எனக்கு இந்தத் தங்கம் வேண்டாம். மீண்டும் அவரிடம் போக எனக்குப் பயமாக இருக்கிறது. நிச்சயமாக நான் போகமாட்டேன்," எனக்கூறி மறுத்தாள்.

****மன்னிப்பு***

பண்டிதர் அவளிடம், "கல்லாத மக்கள் அவனுக்குச் சக்தி உண்டு என்று நம்புகிறார்கள். சாஸ்திரங்களைக் கல்லாதால், கபடத்தாலும் பித்தலாட்டத்தாலும் அவன் மக்களை ஏமாற்றுவதை இவர்கள் உணரவில்லை. சாஸ்திரங்களைக் கற்றுள்ளதால் நான் இதை அறிவேன். அவனுக்கு இவ்வாறான சக்தி இல்லையென்பதில் எனக்கு ஐயமில்லை.

மறுபடியும் நீ இந்தத் தயிரை அவனிடம் கொண்டுபோய்க் கொடுத்து, அவனை உட்கொள்ள வைத்தாயென்றால், ஊரறிய நான் உன்னை மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன். இதுநாள்வரை இரகசியமாகக் கூடி வாழ்ந்துள்ள நாம், அதன்பிறகு ஊரறியக் கணவன் மனைவியாக வாழலாம்.

அப்பொழுது, இந்தத் தங்கம் மட்டுமல்ல, என்னுடைய எல்லாச் சொத்துகளுக்கும் நீ எஜமானி ஆகலாம். இன்பத்திலும் துன்பத்திலும் சமமாகப் பங்கு கொள்ளலாம். ஆகவே, என்னுடைய இந்த விரோதத்தை உன்னுடையதாகக் கருதி, இந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடி," என்று கூறினார்.

பண்டிதரின் வார்த்தைகளை நம்பிய அவள், மறுபடியும் தயிரில் விஷத்தைக் கலந்து, அதைக் கொண்டு போய் மிலரப்பாவிடம் கொடுத்தாள்.

புன்னகை செய்தவாறே மிலரப்பா அதை ஏற்றுக் கொண்டார். இதைக் கண்ட அவள், "பண்டிதர்

கூறியதுபோல் மிலரப்பாவுக்குச் சக்தி இல்லைதான் போலிருக்கிறது," என எண்ணிக் கொண்டாள்.

அப்போது மிலரப்பா, "தங்கத்தைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்கிறாய்," என்று அவளிடம் கூறினாள். இதைக் கேட்டதும் அச்சம் அவளைப் பற்றிக் கொண்டது. பயத்தினால் உடல் நடுங்க ஆரம்பித்துவிட்டது. தேம்பித் தேம்பி அழுதுகொண்டே, நடுங்கும் குரலில், "ஆம் பகவான்; நான் தங்கத்தைக் கூலியாகப் பெற்றுக் கொண்டுதான் இந்தக் காரியத்தைச் செய்தேன்," என ஒப்புக் கொண்டாள்.

பிறகு அவர் காலில் விழுந்து, விஷம் கலந்த அந்தத் தயிரை அருந்த வேண்டாம் எனக் கெஞ்சினாள். அதைத் தன்னிடமே திருப்பிக் கொடுத்து விடும்படியும் கொடிய நோக்கத்தோடு தான் அளித்த அந்தத் தயிரைத் தானே அருந்தி விடுவதாகவும் கூறினாள்.

அவளுக்கு மிலரப்பா இவ்வாறு பதிலளித்தார்:

"எக்காரணத்தைக் கொண்டும் நீ இதை அருந்துவதற்குத் திரும்ப உன்னிடம் கொடுக்கமாட்டேன். உன் மேல் எனக்குள்ள கருணை மிகப் பெரியது. நான் அப்படிச் செய்தேனென்றால், அதனால் என்னுடைய தவத்திற்குப் பங்கம் ஏற்படும். மேலும் என்னுடைய இந்த உலக வாழ்க்கை முடியும் தருவாய்க்கு வந்துவிட்டது. என் வேலை முடிந்துவிட்டது. நான் மறு உலகம் போகும் காலம் நெருங்கிவிட்டது.

****மன்னிப்பு***

உன்னுடைய இந்த விஷம் கலந்த இந்த உணவினால் எனக்கு எந்த விளைவும் ஏற்படாது. இருப்பினும் முதலில் நான் இதை ஏற்க மறுத்ததன் காரணம், நீ விரும்பிய தங்கத்தை நீ பெற வேண்டும் என்பதற்காகத்தான். இந்தப் பாவச் செயலுக்குக் கூலியாகத் தங்கத்தை நீ பெற்றுவிட்டாய். உன் ஆசை நிறைவேறிவிட்டது. பண்டிதரின் விருப்பத்தையும் நிறைவேற்றும் பொருட்டு, இந்த விஷம் கலந்த தயிரை நான் அருந்துவேன்.

பண்டிதர் உனக்கு அளித்துள்ள வாக்குறுதிகளில் நம்பிக்கை வைக்காதே! அவர் உன்னை ஏமாற்றி விடுவார். எனக்கு எதிராக அவர் உன்னிடம் கூறியவற்றில் உண்மை எதுவுமில்லை. உங்களுடைய பாவச் செயலுக்கு நீங்கள் இருவரும் வருந்தும் காலம் வரும். அப்பொழுது இருவரும் பக்தியை நாடுங்கள்; பிராயச் சித்தம் செய்யுங்கள். இதில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

அவ்வாறு உங்களால் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள இயலாவிட்டால், இதுபோன்ற கொடிய செயல்களையாவது தவிர்த்துவிடுங்கள். உயிரே போவதாக இருந்தாலும் இதுபோன்ற கொடிய பாவங்களைச் செய்யாதீர்கள்.

நான் உயிரோடு இருக்கும்வரை, இந்த விவகாரத்தை நீ இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என நான் இப்போது உனக்கு ஆணையிடுகிறேன். காலம் வரும். அப்போது இது எல்லாருக்கும் தெரிய வரும். இது நிறைவேறும்வரை

காத்திரு," இவ்வாறு அவளுக்கு அறிவுறுத்தியபின், மிலரப்பா விஷம் கலந்த தயிரை அருந்தினார்.

அவள் திரும்பி வந்து பண்டிதரிடம் எல்லாவற்றையும் விபரமாகக் கூறினாள். இதைக் கேட்ட பண்டிதர், "சொல்வதை எல்லாம் நம்பிவிடக் கூடாது; அவன் விஷத்தை அருந்திவிட்டான். அது போதும் எனக்கு. வாயை மூடிக் கொண்டு கவனமாய் இரு," என்றார்.

பண்டிதரின் வைப்பாட்டி அளித்த விஷம் கலந்த தயிரை அருந்திய பின், அவ்வூர் மற்றும் சுற்றுவட்டாரத்திலுள்ள ஊர்களுக்கும் மிலரப்பா செய்தி அனுப்பினார். தம்மை முன்பே சந்தித்து, தம் உபதேசத்தைக் கேட்டுத் தம்மிடம் பக்தி கொண்டுள்ளோரையும் தம்மை இதுவரை சந்தித்திராத ஆனாலும் சந்திக்க விரும்புவோரையும் தம்மை வந்து காணும்படி செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இச்செய்தியைக் கேட்டு, ஆண்களும் பெண்களும் பெரும் திரளாகக் கூடினார்கள். மிலரப்பா அவர்களுக்குப் பல நாள்கள் தர்ம உபதேசம் செய்தார்.

அந்நாள்களில் அங்குக் கூடியிருந்த மக்களுக்குப் பல அற்புதங்கள் தோன்றின.

நீலவானத்தில் வானவில்கள் தோன்றின; பல வண்ணங்களில் மேகங்கள் தோன்றின; பல வண்ணங்களில் தோன்றிய மேகங்கள், பல உருவங்களில் காட்சியளித்தன.

****மன்னிப்பு***

தாமரை மலர்களைப் போலவும் கொடிகள் போலவும் திரைகள் போலவும் குடைகள் போலவும் பல வடிவங்களிலும் காட்சியளித்தன. பல வண்ணங்களில் மலர்கள் பொழிந்தன. அங்குக் கூடியிருந்தோர் அனைவருக்கும் மிக இனிமையான தெய்வீகக் கீதங்கள் கேட்டன; எவருமே இதுவரை அனுபவித்திராத நறுமணங்கள் அவ்வட்டாரம் முழுதும் காற்றில் கலந்து பரவின.

அங்குக் கூடிய மக்களில் சிலர், எதனால் இதுபோன்ற மங்கலகரமான அற்புதங்கள் நிகழ்கின்றன என மிலரப்பாவிடம் கேட்டார்கள்.

மிலரப்பா இவ்வாறு பதிலளித்தார்:

'ஆன்மீக வளர்ச்சியில் உயர்ந்த நிலையை அடைந்தோர் மானிடர்களிடையே மிகக் குறைவே! ஆனால், ஆன்மீக வளர்ச்சியில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளோர் வானுலக உயிர்களிடையே மிக அதிகம்.

என் தர்ம உபதேசத்தைக் கேட்பதற்காக வானத்தில் எண்ணற்ற தெய்வங்களும் தேவர், தேவதைகளும் கூடி உள்ளார்கள். அவர்கள் அனைவரும் மிக ஆர்வத்துடன் தர்ம போதனையைக் கேட்கிறார்கள். உங்களால் அவர்களைக் காண முடியாது. என்னால் அவர்களைக் காண முடியும். நீங்கள் காணும் இந்த மங்கலகரமான அற்புதங்கள் எல்லாம் அவர்கள் எனக்கு அளிக்கும் வணக்கமும் மரியாதைகளுமாகும்."

****மன்னிப்பு***

"ஏன் எங்களால் அவர்களைக் காண முடியவில்லை?" என மக்கள் கேட்டனர்.

"என் தர்ம போதனையைக் கேட்பதற்காக வானத்தில் கூடியுள்ள இவர்களில், ஆன்மீகத்தில் மிகவும் உயர்ந்த நிலைகளை அடைந்துவிட்ட தெய்வங்கள் பலர் உள்ளனர். இவர்கள் அனைவரும் மானிடப் பிறப்பைக் கடந்து விட்டவர்கள். இவர்கள் அனைவருமே மிகவும் புனிதமானவர்கள். மற்றும் ஆன்மீக வளர்ச்சியில் வெவ்வேறு நிலைகளை அடைந்துள்ள தேவர் - தேவதைகளும் வானத்தில் கூடியுள்ளார்கள், இவர்கள் அனைவரும் புனிதமானவர்கள். இவர்களைக் காண விரும்புவோர், அறவழியில் நடந்து, புண்ணிய கருமங்களைச் செய்து, தம்மைத் தூய்மைப் படுத்தியிருக்க வேண்டும்.

தெய்வங்களையும் தேவர் - தேவதைகளையும் நீங்கள் காண விரும்பினால், கவனமாகக் கேளுங்கள்," எனக்கூறி, இவ்வாறு உபதேசம் செய்தார்:

'முற்பிறப்புகளில் நீங்கள் குவித்துள்ள பாவ கருமங்களின் பலன் காரணமாக, பிறந்த மறு கணமே பாவம் செய்வதில் மகிழ்கிறீர்கள்.

நற்செயல்களையும் புண்ணிய கருமங்களையும் செய்ய நீங்கள் விரும்புவதில்லை; முதுமை அடையும் வரை உங்களுடைய இயல்பு கொடியதாகவே இருந்து வருகின்றது. கொடிய இயல்பினால் உந்தப்பட்டு, பாவத்தில்

****மன்னிப்பு***
மகிழ்கிறீர்கள்; இதன் விளைவாகப் பாவ கருமங்களைச் செய்து மேலும் மேலும் பாவங்களைக் குவிக்கிறீர்கள்.

"பாவத்திற்குப் பிராயச்சித்தம் உண்டா?" என்று நீங்கள் அறிய விரும்பினால், நன்னெறிகளைக் கடைப்பிடித்து வருவதன் மூலம் பாவத்திற்குப் பிராயச் சித்தம் செய்யலாம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆனால், குற்றம் என அறிந்தும் வேண்டுமென்றே தீய செயல்களைச் செய்வோர், ஒரு கவள உணவுக்காகக் கொடுமையைச் செய்வார்கள்.

நம் குருட்டினை முதலில் நீக்குவோம் எனக் கருதாமல் குருட்டினை நீக்கிவிட்டவர் போல் நடித்து, பிறருக்கு வழிகாட்ட முயலுவோர், தமக்கும் பிறருக்கும் தீங்கையே செய்வார்கள்.

துக்கத்தையும் துயரத்தையும் உண்மையிலேயே நீங்கள் தவிர்க்க விரும்பினால், பிறருக்குத் தீங்கு செய்வதைத் தவிர்த்துவிடுங்கள்.

முன்பு செய்த பாவங்களை ஒப்புக் கொண்டு, உள்ளம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்பைக் கோருங்கள்; இனிமேலும் பாவம் செய்வதில்லை எனப் பிரமாணம் எடுத்துக் கொள்ளுங்கள். இவைதான் பாவங்களுக்கு விரைவான பிராயச்சித்தம் தேடும் வழிகள்.

*****மன்னிப்பு****

*பாவிகளில் பெரும்பாலோர் புத்திக் கூர்மை உடையவர்கள்; இன்பங்களுக்காக ஏங்கி, இன்பங்களில் மயங்கி, குழப்பத்தில் வாழ்பவர்கள். அறத்திலும் நல்ல பண்புகளிலும் இவர்களுக்கு நாட்டமும் நம்பிக்கையும் இருக்காது. பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் இவர்கள், தம் பாவத்தை ஒப்புக் கொண்டு, உள்ளம் வருந்தி, பலமுறை இவர்கள் இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோர வேண்டும்.*

*நன்னெறிகளைக் கடைப்பிடிப்பதிலும் புண்ணிய காரியங்களைச் செய்வதிலும் மனம் சோர்வடையாமல் உங்களை ஈடுபடுத்திக் கொண்டீர்கள் என்றால், அறத்தை விரும்பும் தெய்வங்களையும் தேவ தேவதைகளையும் நீங்கள் காணலாம்."*

*மிலரப்பாவின் இந்த உபதேசத்தைக் கேட்டதும் அங்குக் கூடியிருந்த மக்களின் உள்ளத்தில் உறுதியான பக்தி எழுந்தது. அதன்பின் மிலரப்பா இவ்வாறு அறிவுரை கூறினார்:*

*"சீடர்களே, தெய்வங்களே, மற்றும் இங்குக் கூடியிருக்கும் பக்தர்களே! நம்முடைய முற்பிறப்பின் நல்வினைப் பயன் காரணமாக, நாம் அனைவரும் இங்கு ஒன்றாகக் கூடியுள்ளோம். எனக்கு வயதாகி விட்டது. என்னுடைய இவ்வுலக வாழ்வு முடிவடையப் போகிறது. இந்த வாழ்வில் நாம் மீண்டும் சந்திப்போம் என்பது உறுதியில்லை.*

*இதுவரை நான் உங்களுக்குச் செய்துள்ள தர்ம உபதேசங்களை அலட்சியம் செய்யாதீர்கள். அவற்றைப் பாதுகாத்துப் பின்பற்றி வாருங்கள். அன்றாட வாழ்க்கையில்*

உங்களால் முடிந்தவரை அவற்றைக் கடைப்பிடித்து வாருங்கள். இவற்றைச் செய்து வந்தீர்கள் என்றால், எதிர்வரும் பிறப்புகளில் மறுபடியும் என்னைச் சந்தித்து, தர்ம உபதேசங்களைக் கேட்கும் பாக்கியத்தைப் பெறுவீர்கள்."

இவ்வாறெல்லாம் மிலரப்பா மீண்டும் மீண்டும் உபதேசம் செய்தார். அங்குக் கூடிய மக்களுக்கு மிலரப்பா விஷம் அருந்தியது தெரியாது. இப்போது அவரிடம் நோயின் அறிகுறிகள் தென்பட்டன.

இதைக் கேள்விப்பட்ட பண்டிதர், உண்மையாகவே மிலரப்பாவிடம் நோயின் அறிகுறிகள் தென்படுகின்ன்றனவா, என அறிய ஆவல் கொண்டார். கையில் கொஞ்சம் உணவை எடுத்துக் கொண்டு, மிலரப்பாவிற்கு அதை அளிக்க வருபவர்போல் அங்கு வந்தார். அங்கு வந்த பண்டிதர், மிகவும் வருத்தப் படுபவர்போல் பாவனை செய்து, மிலரப்பாவிடம் இவ்வாறு கூறினார்:

"தங்களைப் போன்ற புனிதர்களை நோய் வருத்தித் துன்புறுத்தக் கூடாது. இருப்பினும் தங்களுக்கு நோய் வந்துவிட்டது. முடியுமானால் தங்கள் சீடர்களுடன் இந்த நோயைத் தாங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

அல்லது இந்த நோயை வேறொருவருக்கு மாற்ற வேண்டும். வேறொருவருக்கு மாற்ற முடியுமென்றால், என்னைப் போன்றோருக்குத் தங்களுடைய நோயை மாற்ற வேண்டும்."

இதைக் கேட்ட மிலரப்பா, புன்னகை செய்தவாறே, "எனக்கு இந்த நோய் வந்ததன் காரணத்தை ஒருவேளை தாங்கள் அறிவீர்கள்," என்றார்.

விஷத்தைக் கொடுத்து அனுப்பியது தாமே என்பது மிலரப்பாவுக்குத் தெரியாது என்றுதான் பண்டிதர் நம்பியிருந்தார். ஆகவே, மிலரப்பா இவ்வாறு கூறியதும் "இதற்கெல்லாம் காரணம் நாம்தான் என மிலரப்பா நம்மீது சந்தேகப் படுகிறார். ஆனால், அவரால் அதை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. நோயை மற்றவருக்கு மாற்றுவதைப் பொறுத்தவரை, நிச்சயமாக இவரால் அப்படியொன்றைச் செய்ய முடியாது," என எண்ணிய பண்டிதர், பிறகு மிலரப்பாவிடம் கூறினார்:

"தங்களுடைய நோயின் உண்மையான காரணம் எனக்குத் தெரியாது. தீய ஆவிகள்தான் காரணமென்றால், மாந்திரீகத்தால் அவற்றை விரட்ட வேண்டும். உடலில் ஏற்பட்ட கோளாறுதான் காரணமென்றால், தக்க மருத்துவத்தால் குணப்படுத்த வேண்டும். ஆனால், தங்களுடைய நோயைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இருப்பினும் தங்களால் அதை மற்றொருவருக்கு மாற்ற முடியும் என்றால், தயவு செய்து தங்களுடைய நோயை எனக்கு மாற்றி விடுங்கள்."
மிலரப்பா பதிலளித்தார்:

"ஏதோவொரு மானிட உயிரை, பேய்களிலேயே கொடிய பேயான "நான்," எனும் அகங்காரம் பற்றிக் கொண்டது. அப்படிப்பட்ட பேய்தான் எனக்கு இந்த நோயை

உண்டு பண்ணியது. மாந்திரீகத்தால் இந்தப் பேயை ஓட்ட முடியாது. நோயையும் குணப்படுத்த முடியாது.

இந்த நோயை உனக்கு மாற்றினேன் என்றால், ஒரு கணம்கூட உன்னால் பொறுத்துக் கொள்ள இயலாது. ஆகவே, அதை உனக்கு மாற்ற மாட்டேன்."

இதைக் கேட்ட பண்டிதர் இவ்வாறு எண்ணிக் கொண்டார்:

"நோயை மற்றொருவருக்கு மாற்றும் சக்தி தமக்கில்லை என்பதை ஒப்புக் கொள்ள மனமில்லாததால், அப்படிச் செய்யத் தமக்கு விருப்பமில்லை எனப் பாசாங்கு செய்கிறார். இவருடைய குட்டை அம்பலப் படுத்துவதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம்."

இப்படி எண்ணிய பண்டிதர், மிகவும் வருந்திக் கேட்பவர்போல் பாவனை செய்து, "தங்களுடைய நோயை எனக்கு மாற்றும்படி வேண்டுகிறேன்," என மிலரப்பாவிடம் கூறினார்.

"சரி, உம் விருப்பப்படியே செய்கிறேன். ஆனால், இந்த நோயை உமக்கு மாற்ற மாட்டேன்; அந்தக் கதவுக்கு மாற்றுகிறேன். அதனுடைய வலிமையை மட்டும் நீர் பார்க்கலாம்," எனப் பதிலளித்த மிலரப்பா, தாம் அமர்ந்திருந்த அறையின் கதவுக்கு நோயை மாற்றினார்.

உடனே, கதவு வெடித்துப் பிளப்பது போன்ற ஓசையுடன், படபடவென ஊசலாடியது. எக்கணத்திலும்

****மன்னிப்பு***

நொறுங்கி விடும்போல் தோன்றியது. அதே சமயத்தில் வேதனையிலிருந்து விடுபட்டவர்போல் மிலரப்பா தோன்றினார்.

இவை யாவற்றையும் பார்த்த பண்டிதர், தமக்குள்ளே எண்ணிக் கொண்டார்: "நிச்சயமாக இவை யாவும் மாயா ஜாலங்கள்," பிறகு, "மிகவும் அற்புதம், எனக்கு அந்த நோயை மாற்றுங்கள்," என மிலரப்பாவிடம் கூறினார்.

"உம்முடைய வேண்டுகோளுக்கேற்ப, இந்த நோயின் வேதனையில் சிறிதளவை உமக்கு மாற்றுகிறேன்," எனக் கூறிய மிலரப்பா, கதவிலிருந்த நோயை எடுத்து அதில் சிறிதளவை பண்டிதருக்கு மாற்றினார்.

வேதனையின் கடுமையைத் தாங்கிக் கொள்ள முடியாத பண்டிதர், கீழே விழுந்து, மிலரப்பாவின் கால்களைப் பற்றிக் கொண்டு, ஓவென ஓலமிட்டார். எவ்வளவு கடுமையான வேதனைக்கு மிலரப்பா ஆளாகியுள்ளார் என்பதைப் பண்டிதர் இப்போது உணர்ந்து கொண்டார். இதை உணர்ந்ததும் தாம் செய்த பாவத்திற்காக மிகவும் வருந்தி, பெருமளவில் கண்ணீர் சிந்திப் புலம்பினார்.

பிறகு, மிலரப்பாவின் பாதத்தைத் தம் தலைமேல் வைத்து, "பகவான், தாங்கள் தெய்வீகமானவர். தங்கள் மீது இந்த நோயைக் கொண்டு வந்தவன் நான்தான். இந்தப் பாவிதான் பொறாமையினாலும் சுய நலத்தினாலும் பீடிக்கப்பட்டு, இந்தக் கடும் துன்பத்தைத் தங்கள்மீது பிரயோகித்தேன். என்னுடைய சொத்துகள் அத்தனையையும் தங்களுக்கு அற்பணிக்கிறேன். அவற்றை ஏற்றுக் கொண்டு,

என்னுடைய பாவத்தை மன்னித்து அருளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.”

தம் பாவத்திற்காக உள்ளம் வருந்தி, இவ்வாறு பண்டிதர் மன்னிப்புக் கோரியதும் மிலரப்பா அவரை மன்னித்து, நோயின் துன்பத்தைத் தம்மிடமே ஏற்றுக் கொண்டார். பிறகு, மிலரப்பா இவ்வாறு பதிலளித்தார்:

"என்னுடைய வாழ்நாள் முழுவதும் எனக்குச் சொந்தமாக வீடோ, சொத்தோ இருந்ததில்லை. இப்போது இறக்கும் தறுவாயில், எனக்கு எதற்குச் சொத்து? உன் சொத்தை நீயே வைத்துக் கொள். இனிமேலும் தர்ம சீலங்களை மீறி, பாவச் செயல்களைச் செய்யாதே."

மிலரப்பா இவ்வாறு கூறியதும் பண்டிதர் ஆறுதல் அடைந்தார். அவர் உள்ளத்தில் இதுவரை இல்லாத பக்தி எழுந்தது. இனிமேலும் பாவங்கள் செய்வதில்லை எனப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். இறக்கும்வரை தவம் செய்வதென உறுதி பூண்டார். பிறகு, இவ்வாறு கூறினார்:

"பொருளிலும் செல்வத்திலும் மயங்கியதால்தான் கடந்த காலத்தில் பாவச் செயல்களைச் செய்தேன். வீடு, நிலம், செல்வம், சொத்து இவற்றில் எல்லாம் இனிமேலும் எனக்கு ஆசையில்லை. தங்களுக்கு என்னுடைய சொத்துகள் தேவையில்லாவிட்டாலும் தங்களுடைய சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் அவை உதவும். ஆகவே, ஏற்றுக் கொள்ளுமாறு தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்."

தம்முடைய சொத்துகளையெல்லாம் ஏற்றுக் கொள்ளுமாறு பண்டிதர் கேட்டுக் கொண்ட போதிலும் மிலரப்பா அவற்றை ஏற்க மறுத்துவிட்டார்.

மிலரப்பாவின் நோய்க்குப் பண்டிதர்தான் காரணம் என அறிந்ததும் மக்கள் ஆத்திரமடைந்தனர். அவர்களை மிலரப்பா இவ்வாறு சமாதானப்படுத்தினார்:

"நான் இந்த ஊரில் சிறிது காலம் தங்கியதன் பலனாக, பாவத்தால் இறுகிப்போன, மனசாட்சியற்ற ஒரு பாவி, தன் பாவங்களுக்காக உள்ளம் வருந்தி, தர்ம போதனையை ஏற்றுக் கொண்டான். தன் பாவங்களை ஒப்புக் கொண்டு, இனிமேலும் தர்ம சீலங்களை மீறிப் பாவச் செயல்களைச் செய்வதில்லை என உறுதி பூண்டுவிட்டான். தீய வழியில் இருந்து அவனை மீட்டு நல்வழியை அவனுக்குக் காண்பித்துவிட்டேன். அவன் இப்போது நல்வழிக்குத் திரும்பிவிட்டான். நான் இங்கு வந்ததன் குறிக்கோள் நிறைவேறிவிட்டது."

மிலரப்பா இவ்வாறு கூறியதும் மக்கள் சமாதானம் அடைந்து பண்டிதரை மன்னித்துவிட்டார்கள்.

..........................................................................

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்